
ஆகஸ்ட் 1988

# அர்ச்சுன

கல்வி — முயற்சி — பெருவாழ்வு



சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

விலை ரூபா 4/=



## தரமான கலர்ப்படப் பிரதிகள்

* அதிகுறை கட்டணத்தில்
* மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச்சுருள் கழுவுதல்

முற்றிலும் இலவசம்

* நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்
* 3 முதல் 5 நாட்களில் விநியோகம்

## ஷப்ருவை நாடுங்கள்

ஷப்ரு நிதி நிறுவனம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 22073


## நாம் செய்ய வேண்டியவை

* நல்லதையே செய்வோம்.
* நல்லதையே நினைப்போம்.
* சுற்றுடலைத் தூய்மை செய்வோம்.
* இயன்றளவு பழவகை மரங்களை நடுவோம்.
* பனைஅபிவிருத்தியில் ஊக்கம் எடுப்போம்.
* பனம் பண்டங்களை உபயோகிப்போம்.
* உள்ளூர் உற்பத்திகளை ஆதரிப்போம்.
* நல்ல தமிழ் பேசவும் எழுதவும் பயில்வோம்.
* பெரியவர்களை வணங்கி நல்லாசி பெறுவோம்.
* எல்லோரும் தினமும் யோகாசனம் செய்வோம்.
* கடமையை எல்லோரும் சரிவரச் செய்வோம்.
* எல்லோரும் வீட்டுத் தோட்டம் செய்வோம்.
* திருக்குறளையும், நீதி நூல்களையும் படிப்போம்.

நூறு மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள
திருக்குறளை வெட்டிஅனுப்பி திருவள்ளுவர் படம் பெற்றுக்கொள்ளுங்கள்.


நாளும் நற்பணி செய்ய உங்கள் ஆதரவை நாடும்

## ★ மில்க்வைற் - யாழ்ப்பாணம். ★

மரம் நடுவீர் பயன் பெறுவீர்

# அர்ச்சுனு

தெய்வம் நமக்குத் துணைபாப்பா
—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா

—பாரதியார்

தனு: 1 கணை: 4

★

ஆகஸ்ட் 88

★

விலை ரூபா: 4-00


## உங்களோடு ஒருகணம்

மலரும் உள்ளங்களே!

நீங்கள் பாடநூல்களைக் கவனமாகப் படிக்கிறீர்கள். பாடநூல்களை மட்டும் படித்தால் போதுமா? வேறு நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளைப் படிக்க வேண்டாமா? அவ்வாறு படித்து உங்கள் அறிவை விருத்தி செய்ய வேண்டாமா?

அப்படியானல் நீங்கள் எவற்றை வாசிக்க வேண்டும்? சிறுவர்களுக்கான அறிவியல் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் என்பவற்றைப் படிக்க வேண்டும்.

நல்ல எழுத்தாளர்கள் படைத்துள்ள சிறுவர் இலக்கிய நூல்களை அர்ச்சுனுவில் அறிமுகம் செய்வோம். அப்போது நூல்களைத் தெரிவு செய்வதில் உங்களுக்குக் கஷ்டம் இருக்காது

சிறுவர்களுக்கான நல்ல நூல்களை சஞ்சிகைகளைப் படியுங்கள்.

உங்கள் அறிவு விரிவடையும். ஓய்வு நேரம் வீண் போகாது. நல்ல பொழுது போக்கினை வளர்த்துக் கொள்வீர்கள். இன்பம் பெருகும். நல்ல எண்ணங்கள் மனத்தில் உருவாகும். நல்லன செய்வீர்கள்.

பள்ளமான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம்போல்
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்

— ஆசிரியர் —

# சுவர் மணிக்கூடு

பாலர் பாடல்

வட்டமான முகத்தில் நேரம்
காட்டும் மணியண்ணு
கிட்டவந்து தொட்டுப் பார்த்தால்
என்ன சொல்லுவீர்?

சுவரி லேறித் தொங்கிக் கொண்டு
மணியைக் காட்டுறீர்!
சுழலும் கைகள் மூன்றினையே
உமக்குத் தந்ததார்?

டிக்டிக் டிக்டிக் டிக்டிக் டிக்டிக்
சப்தம் செய்கிறீர்
மணியடித்து நேரம் தன்னை
எமக்குச சொல்கிறீர்.

— ''கோப்பாய் சிவம்'' —

# முயன்று பாருங்களேன்

## எண்சிலம்பம்

**அன்பார்ந்த மாணவ மணிகளே!**

கணிதத் துறையில் உள்ள அறிவை வளர்க்கும் நோக்குடன் அர்ச்சுனவில் எண்சிலம்பம் தொடர்ந்து வெளிவரும்.

எண் சிலம்பத்தைப் படியுங்கள். சிந்தியுங்கள். தேவையான இடத்தில் கணிதப் பிரச்சினைகளைச் செய்து பாருங்கள்.

விடைகளை எண்சிலம்பம் கூப்பனில் எழுதி அனுப்பி வையுங்கள். இப் போட்டியில் நடுவர்களின் முடிவே இறுதியானது.

சரியான விடைகளை எழுதும் அதிர்ஷ்டசாலிக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

பரிசு பெற்றவர்கள் கடிதமூலம் அழைக்கப்படுவர். பரிசுக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.


**பரிசு விபரம் :** முதலாம் பரிசு: ரூபா 50/=
இரண்டாம் பரிசு: ரூபா 25/=
மூன்றும் பரிசு: ரூபா 15/=

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 31 .7.88

**அனுப்ப வேண்டிய முகவரி :**

எண்சிலம்பம் – 4,
'' அர்ச்சுன ''
அஞ்சல்பெட்டி எண் 23,
யாழ்ப்பாணம்.
இலங்கை.

# எண் சிலம்பம்




## போட்டி இலக்கம் - 4

பெயர் செல்வன் / செல்வி........................

........................................

முகவரி ........................................

........................................

கையொப்பம் ........................................

ஆக்கம்
உதங்கா

### இடமிருந்து வலம்

(a) இவ்வெண்ணால் எந்த எண்ணைப் பெருக்கினும் வகுக்கினும் அவ்வெண் மாறாது.
(b) இருபது ஸ்கோர் ஆக்குவதற்கு இருபத்தாறு தேவை.
(e) இதன் இருமடங்கு வரை மந்திரம் செபிப்பது மரபு.
(g) நான்கு டசின் பொருட்களின் தொகை.
(h) 20 வது முதன்மை எண்.
(j) 360 இன் அண்ணளவான வர்க்கமூலம்
(k) இவ் வெண்ணின் மடங்குகளின் சுட்டி இவ்வெண்ணேயாகும்.
(l) ஒரு மைலுக்கு அண்ணளவான மீற்றரில் ஒரு கிலோ மீற்றர் குறைகிறது.
(m) சொல்லுக்குறுதியான எண்ணில் சிறியது.
(n) எண் அடி பன்னிரண்டில் 59 ஆக அடி பத்தில் உள்ள எண்.
(o) ஒரு மீற்றரில் உள்ள சென்ரி மீற்றரில் ஒன்று மறைந்து நிற்கிறது.
(p) எண் அடி எட்டில் 130 ஆக அடிபத்தில் உள்ள எண்.
(r) சினிமாக் கலையையும் சேர்த்தால் கலைகளின் எண்ணிக்கை.
(t) $\overline{\Lambda}$ ஆரையன்களில் உள்ள பாகைகளின் எண்ணிக்கை.

### மேலிருந்து கீழ்

(a) 5 வது முக்கோணி எண்
(c) $x^2 - 15\ 1 = y^2$ என்பதில் $y = 75$ ஆகும் போது x இன் பெறுமதி
(d) பாரத யுத்தம் எத்தனை நாட்கள் நடந்ததாம்.
(f) 40 தொடக்கம் 50 வரையும் உள்ள எண்ணின் சுட்டி 2 ஆக அமைந்த எண்.
(g) அடி 7இல் இதன் மடக்கை 2
(i) அடி பதின்மூன்றில் 100 ஆக அடி பத்தில் உள்ள எண்.
(j) ஒரு ஏயரில் உள்ள சதுர மீற்றர்கள்.
(n) $3n + 2$ என்னும் n ஆம் உறுப்பைக் கொண்ட கூட்டல் விருத்தியில் 22 ஆம் உறுப்பு
(p) 81 தொடக்கம் 90 வரை உள்ள எண்களில் சுட்டி 8 ஆக உள்ள எண்.
(q) இதன் நிரப்பு கோணம் 62 பாகை ஆகும்.
(s) ஆள் இத்தனை வீதம் ஆடை இத்தனை வீதம் என்றும் சொல்லலாம்.

# எங்களுக்கும் காலம் வரும்

சொக்கன்

**சிறப்புச் சிறுகதை**

சந்திர மௌலீசர் மகா வித்தியாலயத்தில் நரேன் ஏழாம் ஆண்டு படிக்கும் மாணவன் வகுப்புப் பாடங்கள் யாவிலும் முதல்வன் அவன் தான்

திறமையாலும் நேர்மையாலும் அதிபர் ஆசிரியர்களின் விருப்பத்திற்கு உரியவனாய் அவன் விளங்கினான். பண்பாலும், அன்பாலும் சக பாடிகளது மதிப்பிற்கு உரியவனாய் அவர்களின் உள்ளங்களில் இடம் பெற்றான்.

நாளை பாடசாலைப் பரிசளிப்பு விழா. அதற்கான ஆயத்தங்கள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

கடைசிப் பாட நேரத்தில் நரேனின் வகுப்பாசிரியர் வகுப்புக்கு வந்தார். நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கட்டும். வெள்ளை மேற்சட்டையும் நீலக்காற்சட்டையும் அணிந்துவரத் தவறக்கூடாது. பரிசு பெறும் மாணவர்கள் இவற்றோடு கால்மேசு, சப்பாத்து, கழுத்துப்பட்டியும் தரிக்க வேண்டும். தெரிந்ததா?

ஆசிரியர் சொல்லி முடிந்ததும் நரேன் நீங்கலாக எல்லா மாணவர்களும் ஒரே குரலில் ''ஓம் சேர்'' என்று கத்தினார்கள். நரேன் மட்டும் ஒன்றும் கூறாது தலைகுனிந்து அமர்ந்திருந்தான்.

ஆசிரியர் நரேந்திரனைப் பார்த்து, ''நரேந்திரன், இந்த வகுப்பிலே எல்லாமாக ஏழு பரிசில்களை நீ சொந்தமாக்கி இருக்கிறாய். இவ்வளவையும் பெறுவதற்கு ஏற்ற முறையில் நீ நாளை வர வேண்டாமா?'' என்று அன்போடு கேட்டார்.

நரேனின் முகம் வாட்டம் அடைந்தது அவன் தனது இருக்கையினின்றும் எழுந்து நின்றான். ''சேர், அம்மா வெள்ளை மேற்சட்டை மட்டும் வாங்கித் தருவதாகச் சொன்னவ. என்னிடம் பழைய நீலக் காற்சட்டை ஒன்றும் இருக்கிறது கால்மேசு, சப்பாத்து, கழுத்துப்பட்டி......'' மேலே கூற முடியாது இழுத்தான். அவன் குரல் தழுதழுத்தது.

நரேன் சொல்லாது விட்டது என்ன என்பது ஆசிரியருக்கு விளங்கி விட்டது அவருக்கு அவனது குடும்பநிலை நன்கு தெரியும்.

வறுமையில் ஒட்டி உலர்ந்து கசங்கிய உடையிலே காட்சி தரும் அந்த ஏழைச் சிறுவனை பரிசு பெறுவதற்கான அலங்காரக் கோலத்தில் நாளை நிறுத்த அவரால் முடியுமானால், நிச்சயம் அதை அவர் செய்திருப்பார்.

ஆசிரியரின் மனம் விரிந்திருந்ததற்கு நேர்மாறாக அவரது பணப்பை சுருங்கி இருந்ததே! என்ன செய்வார்?

ஆசிரியர் ஒன்றும் பேசவில்லை. ஆறுதல் மொழி கூறினாலே நரேன் அழுதுவிடுவான் போல் இருந்தது.

நரேன் மான உணர்ச்சி மிக்கவன். பிறரின் உதவியை எதிர்பார்க்கும் வழக்கம் இல்லாதவன். இவையும் ஆசிரியருக்குத் தெரியும்.

அவர் மௌனமாக வகுப்பறையை விட்டு வெளியேற மாணவர் கூட்டம் அவரைத் தொடர்ந்தது.

நரேன் பிறக்கும் பொழுதே ஏழையாகப் பிறக்கவில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கொழும்பிலே வர்த்தக நிறுவனம் ஒன்றின் உரிமையாளராய் இருந்தவர் அவன் தந்தை.

பங்களா வாசம். அங்கு எடுபிடிவேலை செய்ய எத்தனையோ வேலைக்காரர்கள். பெற்றோருக்கு ஒரே ஒரு மகனான நரேன் செல்வத்தில் திளைத்து பெற்றோரின் அன்

பில் முழுக்காடி வளர்ந்தது என்னவோ உண்மைதான்.

இருந்தாற்போல் ஒருநாள் இனக்கலவரம் காட்டுத்தீ போலக் கொழும்பிலே மூண்டது. காடையரின் வெறியாட்டத்திற்குச் நரேந்திரனின் தந்தைக்குச் சொந்தமான கடை மட்டுமல்லாது, தந்தையும் பலியானர் நரேனும் தாயும் அகதிகளாய்க் கப்பலேறி யாழ்ப்பாணம் வந்தனர்.


நகைகளும் கொள்ளைபோய் வீட்டிலிருந்து பொருள்களும் தீச்குஇரையாகி அற்பசொற்பமான பணத்துடனும் ஒருசில உடைகளுடனுமே அவர்கள் யாழ்ப்பாணம் வந்தார்கள்.

நரேனின் தாய் ஒரு சிறு வீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டாள். கையிலிருந்த பணத்திற்கு ஒரு தையல் யந்திரம் வாங்கினுள்.

கடந்தநான்கு ஆண்டுகளாக இரு சீவன்களின் வயிற்றுக்கும் நரேனுடையபடிப்பிற்கும் அந்தத் தையல் யந்திரந்தான் உயிர்நாடியாக இருந்து வருகிறது.

நரேன் வீடு சென்ருன். அம்மா அங்குதன் சொன்ன சொல்லைக் காப்பாற்றியிருந்ததைக் கண்டு அவனுக்குச் சிறிது திருப்தி ஏற்பட்டது. பொப்ளின் சட்டைதான் பரவாயில்லை. ஒருநாள் தேவைக்குத்தானே?

நரேனின் தாய் அவனுக்கு வேலை வைக்காமல் அவனது பழைய நீலக்காற்சட்டையையும் தோய்த்து முற்றத்துக் கொடியிலே காயவிட்டிருந்தாள்.



நரேனின் மான உணர்ச்சி அவன் தாய்க்கு மட்டும் இல்லாமற் போகுமா? அவனுக்கே தன்மானத்தைப் பாலோடு ஊட்டி வளர்த்தவள் அவன் தாய்தானே?

அதைப்பார்க்க அவனுக்குக் கவலையாய் இருந்தது. தையல் யந்திரத்தோடு யந்திரமாக உழைத்து உழைத்து ஓடாகும் அம்மாவுக்கு இந்த வேலையை

(25ம் பக்கம் [illegible])

# நாளிலும் பொழுதிலும் விஞ்ஞானம்

— ஆர். பாலக்கிருஷ்ணன்

எதற்கும் விஞ்ஞானரீதியில் விளக்கம் தருபவர் மு. குமாரசாமி. மூடப்பழக்கங்கள் என்பவற்றிற்கு அறிவியல் முறையில் அர்த்தங் காண முயல்பவர். உண்மையான மூடநம்பிக்கைகளை உதறிவிடுவார். அர்த்தம் உள்ளவற்றைக் கண்மூடித்தனமாக இல்லாமல் விளக்கிக் கொண்டு பின்பற்றுவார்.

ஊரிலே அவருக்குப் பெயர் விஞ்ஞானம் குமாரசாமி. பலருக்கு அது ஏளனமாக ஏற்பட்ட பட்டம் எனப்படலாம். ஆனுல் அவர் முறையாக விஞ்ஞானம் படித்தவர்தான்.

மருமக்கள் ரவிக்கும், வேணிக்கும் மாமாவின் போக்கு மிகவும் பிடிக்கும். அவர்கள் எதையும் துருவித் துருவிக் கேட்கும் மனநிலையுள்ள சிறுவர்கள். நச்சரிப்பு என்று ஒதுக்கிவிடாது பொறுமையுடன் எதனையும் விளக்கக் கூடியவர் மாமா ஒருவர்தான்.

அப்பாவும், அம்மாவும் சிறுவர்களின் கேள்விகளுக்கு விளக்கந்தர ஒரு சமயம் பொறுமை இல்லாதவர்களாகவும், சில சமயம் உண்மையில் கேள்விகளுக்கு விடை தெரியாதவர்களாகவும் இருப்பார்கள்.

''றேடியோ''வில் பாட்டுக் கேட்டுக் கொண்டே அரிசியில் கல்லு நெல்லுப் பொறுக்குவாள் ''அம்மா.றேடியோ'' எப்படிப் பாடுகிறது?! என்று கேட்டு விட்டால் போதும் பள்ளிப் பாடத்தைப் படிக்காததற்காக ரவிக்கு ஒரு பாட்டு; அடுப்பை எரிக்காமல் புகையவிட்டதற்காக வேணிக்கு ஒரு மங்களம்.மங்களத்திலே மாமாவுக்கும் ஒரு பங்கு உண்டு. பிள்ளைகளை அதிகப் பிரசங்கிகள் ஆக்குவது என்ற குற்றச் சாட்டுக்கு ஆளாவார் மாமா. குமாரசாமியிடம் இதே கேள்வியைக் கேட்டிருந்தால் அழகான விளக்கம் கிடைத்திருக்கும்.

''மாமாவுக்கும் வேலையில்லை மருமகளுக்கும் வேலையில்லை'' என்றதும் சலிப்பு மட்டும் அம்மாவிடமிருந்து வரும். அப்பா எதிலும் தலையிடமாட்டார். ஓய்வில்லாத வேலையென்று தாமாகவே கூறிக் கொண்டு நழுவி விடுவார். ஆனுல் கந்தோரில் இருந்து வீடு வந்தால் ''கன்வஸ்,'' கட்டிலிலே தஞ்சமெனக் கிடப்பார்.

வேணியும் ரவியும் சண்டை போட்டுக் கொள்வார்கள். குமாரசாமி வந்து விட்டால் பேச்சுத் திசைமாறி எங்கோ சென்றுவிடும். இறுதியில் சண்டைக்குக் காரணம் என்னவென்பதை மறந்து விடுவார்கள்.

''இதோ விஞ்ஞானம் குமாரசுவாமியும், ரவியும், வேணியும் கும்மாளம் அடிக்கப் போகிறுர்கள்'' என்று அம்மா முணுமுணுக்கிருள்.

(வளரும்)

## விஞ்ஞானக் கதிர்

# நலம் பருகும் பால்

மயிலங்கூடலூர் **பி. நடராசன்** —

இளங்கோ ஒரு சிறுவன் மலர் அவனுடைய அக்கா. அவர்கள் வீட்டில் ஒரு பசு நின்றது அந்தப் பசு கன்று ஈன்றது. அந்தக் கன்றுடன் விளையாடு வார்கள்.

ஒரு நாள் இளங்கோ பசுக்கன்றைத் தூக்கினான். முன்பு தூக்கக் கூடியதாகக் கன்று இருந்தது. இப்போது அது பார மாக இருந்தது. அது முன்பு இருந்ததை விட நீளமாகவும், உயரமாகவும் இருந் தது.

"அப்பா ஏன் கன்றைத் தூக்க முடியவில்லை"? என்று இளங்கோ அப் பாவிடம் கேட்டான். "கன்று வளர்ந்து விட்டது. அதனால் தூக்க முடியவில்லை" என்றார் அப்பா.

கன்று புல்லைத் தின்பதில்லை, வைக் கோலையும் தின்பதில்லை அது எப்படி வளர முடியும்?" என்றான் இளங்கோ.

"பசுக்கன்று எதனையும் உண்பதில் லையா?" என்றார் அப்பா. "பசுக்கன்று பாலைக் குடிக்கிறது," என்றான் இளங்கோ.

"பசுக்கன்று வளர்வதற்குத் தேவை யான சத்துக்கள் எல்லாம் பாலில் உண்டா?" என்று மலர் கேட்டாள்.

"ஆம் பசுக்கன்று நிறையில் வளர்ச்சி அடைகிறது; உயரத்திலும் நீளத்திலும் வளர்கிறது. கன்று வளர்வ தற்குத் தேவையான சத்துக்கள் எல் லாம் பாலில் இருக்கின்றன. ஆகவே பசுக்கன்று பாலை மட்டும் குடித்து வாழ் கிறது" என்று அப்பா கூறினார்.

பசுக் கன்றைப்போல் நாங்களும் பால் மட்டும் குடித்து வாழ முடியுமா? என்று மலர் கேட்டாள்.

"தாய்ப்பால் இல்லாத குழந்தைகள் பசுப்பாலைக் குடித்து வளர்கின்றன. தாய்ப்பாலில் இருந்து அல்லது பசுப் பாலில் இருந்து அவர்களுக்குத் தேவை யான சத்துக்கள் கிடைக்கின்றன, வளர்ந்தவர்களுக்குப் பாலை விட வேறு உணவுகளும் வேண்டும்," என்று அப்பா கூறினார்.

இளங்கோ, மலர், அம்மா, அப்பா எல்லோரும் சாப்பிடக் கூடியிருந்தார் கள். அம்மா எல்லோருக்கும் பாலைக் கொடுத்தார்.

"அம்மா, எனக்கு ஆடை வேண் டாம்" என்று கூறினான் இளங்கோ.

"இளங்கோ, பால் ஆடையை நீக்கி விட்டுப் பாலைக் குடிக்கக் கூடாது. ஆடையில்தான் அதிக சத்து உண்டு" என்று. அப்பா கூறினார்.

"பாலைக் காய்ச்சும் போது சில பொருள்கள் பாலில் இருந்து பிரிகின் றன. அவை ஆடையாக மேலே படி கின்றன. எமது உடல் வளர்வதற்குத் தேவையான உணவுச் சத்து பால் ஆடையில் உண்டு." என்றார் அப்பா. இதைக் கேட்ட இளங்கோ, "சரி இனி மேல் பாலை ஆடையோடு குடிப்பேன்' என்றான்.

(வளரும்)

# வீடியோ

# படப்பிடிப்பு

## வர்ண நிழற் படப்பிடிப்பு

உங்கள் மங்கள வைபவங்களை கம்பியூட்டர் மயப்படுத்த புதிய மொடல் குறைந்த ஒளியிலும் சிறந்த படங்களை எடுக்கும் வீடியோ கமராக்கள், மற்றும் வீடியோ மிக்ஸர்கள் மூலம் பலவருட அனுபவம் பெற்றவர்களால் சிறந்த முறையில் படமாக்கிக் கொள்ளவும்,

ஐந்து தினங்களில் Post card size பிரதியை ரூபா4-50 க்கு கொழும்பிலிருந்து கழுவி பிரதியாக்கம் செய்வதற்கும்,

மற்றும்

T V, வீடியோ டெக், வீடியோ கமரு, பற்றரியில் இயங்கும் டியூப் லைற்கள், எலக்ட்ரோனிக் கடிகாரங்கள் மணிக்கூடுகள் மற்றும் சகல எலெக்ரோனிக் உபகரணங்களும் சிறந்த முறையில் பழுதுபார்த்துக் கொள்வதற்கும்,

# எவர் விஷன்

(குளிரூட்டப்பட்டது)

21 A மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்


# விடுகதைகள் வேண்டுமா?

1. கொத்துக் கொத்து ஈச்சங்காய், கோடாலி ஈச்சங்காய். மதுரைக்குப் போனாலும் வாடாத ஈச்சங்காய்.
2. சுட்ட குருவி ஊருக்குப் போகிறது
3. சூடுபட்டுச் சிவந்தவன் வீடுகட்ட உதவுவான்.
4. செடியில் விளையாத பஞ்சு, தறியில் நூற்காத நூல், கையில் தொடாத துணி.
5. தாடிக்கார மீசைக்காரன், கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன்
6. தேவை என்றால் வீசுவது, தேவை இல்லையென்றால் எடுத்து வைப்பது.
7. நட்டேரி நடுவில் நடுத்தம்பி குழலூதுகிறான்.
8. நடலாம் பிடுங்க முடியாது
9. நித்திரையில் தூதுவன் நினையாமல் வருவான்

தொகுப்பு:-

செல்வி: லோகினி தம்பிராசா

## விடைகள்

1. பற்கள்
2. பலகாரம்
3. செங்கல்
4. சிலந்திவலை
5. தேங்காய்
6. நங்கூரம்
7. தவளை
8. பச்சை குத்துதல்
9. கொட்டாவி

# வலையில் வீழ்ந்த பறவைகள்

ஓர் ஏரிக்கரையிலே வேடன் ஒருவன் விரித்திருந்த வலையில் பல பறவைகள் வீழ்ந்திருந்தன. பெரிய பறவைகளா யிருந்ததால், அவைகள் எல்லாம் சேர்ந்து வலையையே தூக்கிக்கொண்டு பறந்து சென்றுவிட்டன. அவைகளைத் தொடர்ந்து வேடனும் ஓடினுன். வழியில் ஒரு குடி யானவன் அவனைக் கண்டு, "நீ எங்கே ஓடுகிருய். தரையில் நடந்துகொண்டே பற வைகளைப் பிடித்துவிட முடியுமா? என்று கேட்டான்.

"வலையில் ஒரே ஒரு பறவை இருந் தால் என்னுல் பிடிக்க முடியாது, ஆனுல் இவைகளைப் பிடித்து விடுவேன்' என்று வேடன் சொன்னுன்.

அவன் சொன்னபடியே நடந்தது. மாலை நேரம் வந்ததும், பறவைகளில் ஒவ்வொன்றும் தனது கூட்டுக்குச் செல் வதற்காக ஒவ்வொரு திசையில் வலையை இழுத்தது. ஒன்று காட்டை நோக்கியும், ஒன்று வயலை நோக்கியும் பறக்கத் தொடங்கியது. அதனுல் எல்லாப் பறவை களும் சேர்ந்து வலையோடு தரையில் விழுந்தன.

உடனே வேடன் அவைகளைப் பிடித்துக் கொண்டு விட்டான்.

செல்வன். எஸ். அருள்குமார்
*(வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.)*

# பாடும் படிப்பும்

முருகையன்


பாடறிவோம் படிப்பறிவோம்
பள்ளிக்கூடம் நாமறிவோம்
ஏடுகளில் எழுதியுள்ள
எவைகளையும் ஆராய்வோம்
மூடர்களாய்ப் பொய்களுடன்
முடங்கிவிடச் சம்மதியோம்.

அணுவுள்ளும் போய் வருவோம்
ஆகாயம் அளவிடுவோம்
துணிவுடனே எதிரிகளின்
சூழ்ச்சிகளைத் துண்டு செய்வோம்
பணிவறிவோம்;
ஆனுலும்...
பதுங்கிநிற்க மாட்டோமே.

சுற்றுமுற்றும் நாம் பார்ப்போம்
துன்பியலைத் தடை செய்வோம்
கற்ற வித்தை கையாண்டு
கருவிகளும் கண்டறிவோம்
வெற்றியென்னும் பழம் பழுக்க
வேண்டுவன செய்வோமே.

பாடறிவோம் படிப்பறிவோம்
பள்ளிக்கூடம் நாமறிவோம்.

✶ முதல் கிரிக்கெட் டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் 1880-ம் ஆண்டு அவுஸ்திரேலி யாவில் நடைபெற்றது. இதில் அவுஸ்தி ரேலியா வெற்றிபெற்றது.




அமைதி நிறைந்த அந்த இடத்தில் மென்மையான தம்பூரா இசைக்கேற்பச் சிறுமி ஒருத்தி பாடிக்கொண்டிருந்தாள். வானம்பாடி தாழப் பறந்து பாட்டு ஒலி வந்த வீட்டுக் கூரையில் இருந்தது. அந்த வீட்டுக் கூரையில் ஒளி உள்ளே செல்லவிடும் யன்னல் இருந்தது. வானம்பாடி அதனூடாகப் பார்த்தது. அங்கே உயர்ந்த, இருண்ட முகமுடைய மனிதன் நாற்காலியிலிருந்து தம்பூரா வாசித்துக் கொண்டிருந்தான். அவன் அருகே பதினான்கு அல்லது பதினைந்து வயது மதிக்கத்தக்க சிறுமி அவனருகே நின்று பாடிக்கொண்டிருந்தாள்.

**அங்கம்: 4**

'மகிழ்ச்சியாக உள்ள மக்களை இப்போதுதான் நான் காண்கிறேன்'' என்று அது எண்ணியது. அவர்கள் இசைக் கருவியை இசைத்துப் பாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சங்கீதப் பிரியர்கள். பாடுவதில் அவர்கள் எவ்வாறு மகிழ்கிறார்கள் என்பதை 'நான் பார்க்கவேண்டும்'' என அது எண்ணியது. இசையைக் கேட்டபடி அது அவர்களை அவதானித்தது.

ஆனால், உண்மை அது எதிர்பார்த்தது போல் இல்லை என்பதை உணர்ந்து ஏமாற்றம் அடைந்தது. மீண்டும் அதன் முடிவு தவறாகி விட்டது. அந்தப் பெண் மிகவும் கஷ்டத்தோடு பாடிக் கொண்டிருந்தாள். குரல் உயர்ந்து செல்லும் போது அவள் வலிந்து பாட முயன்றாள். அவ்வாறு பாடும்போது அவள் முகம் சிவந்தது. இமைகள் இறுக மூடிக் கொண்டன. இமைகளிலுள்ள இரத்தக் குழாய்கள் புடைத்தன. அவள் நெஞ்சு விம்மித் தணிந்தது. அவள் மூச்சடங்கி நின்றாள். இசை படிப்படியாகக் குறைந்தது. பாடலின் சொற்கள் தண்ணீர் இடையீடின்றிப் பாய்வதுபோல உருண்டோடியது. அவளுக்கு மூச்சுவிடக்கூட நேரம் கிடைக்கவில்லை.

## எனக்காகப் பாடுவேன்

அவளுடைய குரல் கரகரத்தது. தம்பூரா இசையும் பாட்டும் நின்று விட்டன. தம்பூரா வாசித்தவன் அவளை முறைத்துப் பார்த்தான். ''நீ இப்படிப் பாடினால் நாம் எப்படி மக்களிடம் காசு கேட்கலாம். மீண்டும் பாடு'' என்றான். அவள் தலை தாழ்ந்தது. அவளது கண்ணில் கண்ணீர் நிறைந்தது. தம்பூரா இசைக்கேற்ப அவள் மீண்டும் பாடினாள். அவளது குரல் நடுங்கியது.

வானம்பாடிக்கு உண்மை விளங்கியது: ''அவள் கூடப் பிறருக்காகவே பாடுகிறாள்.

**திருச்செந்தூரன்**

தானே விரும்பித் தனக்காகப் பாடுவதாக இருந்தால் அவள் தனது வீட்டில் ஆறுதலாக இருந்தல்லவா பாடியிருப்பாள். ஆனால் அவளால் அப்படிச் செய்யமுடியாது. ஏனெ

> ★ டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்றவர் இந்தியாவைச்சேர்ந்த (*Sunil Gavaskar*) ஆகும். இவர் 10,000 ஓட்டங்களைப் பெற்று தொடர்ந்தும் விளையாடிக் கொண்டிருக்கின்றார். மிகக்கூடிய சதங்களைப் பெற்றவரும் இவரே. (34 சதங்கள்.)
>
> ★ இரண்டாவதாக அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர் இங்கிலாந்தைச் சேர்ந்த (*Geoff Boycoh*) ஆகும்.
>
> ★ ஒரு இனிங்ஸில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணி இங்கிலாந்து ஆகும். இது அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தமது முதலாவது இனிங்சில் 903 ஓட்டங்களைப் பெற்றது.

னில் அவள் பிறருக்கு மகிழ்ச்சி தர அல்லவா பாடுகிறாள். பணம் சம்பாதிக்க அவள் கஷ்டப்பட்டுப் பழகிப் பாட வேண்டியுள்ளது. தம்பூரா வாசிப்பவன் கூடப் பிறருக்காகவே அதனைச் செய்கிறான். அதற்காகவே அவன் அவளையும் பாடும்படி கட்டாயப்படுத்துகிறான். இதற்கெல்லாம் என்ன கருத்து? ஆனால், அவர்கள் அதைக் கனவிற் கூட நினைப்பதில்லை'' வானம்பாடி இவ்வாறு தனக்குள்ளாகவே சிந்தித்தது.

பிறருடைய இசைக்கருவிகளாகப் பணியாற்றும் மனிதர்களுக்காக அது வருத்தப்பட்டது. சோகமாகப் பாடியது. இரங்கத்தக்க நிலையில், பிறருக்காக ஆர்வமும் பயனுமின்றி உழைப்பவர்க்கான அனுதாபத்தை அதன் பாடல் வெளிப்படுத்தியது.

வானம்பாடி தன்னை வளர்ப்பவனது கூட்டுக்குச் செல்வதில்லை என முடிவு செய்தது. அது அரண்மனை போல வசதிகள் நிறைந்ததாக இருந்தாலும் அக் கூட்டில் மீண்டும் வாழ அது விரும்பவில்லை. துன்பப்படும் மனிதர்கள் பலரைக் கண்டபோதுதான் அது தனது பழைய வாழ்வின் அவலத்தை உணர்ந்தது. அதனுடைய பாட்டு பொருளற்றதாகவும் ஆர்வமற்றதாகவும் தேவையற்றதாகவுமே இருந்தது. தன்னை வளர்த்தவனுக்கும் அவனது சகோதர சகோதரிகளுக்கும் ஆக அது ஏன் பாட வேண்டும்? குழம்பிய நிலையில் பழைய வாழ்க்கை பழுதில்லை என அது எண்ணும். ஆனால், இரங்கத்தக்க மனிதர்களை எண்ணும்போது தான் அதற்குத் தனது பழைய வாழ்வின் அவலம் புரிந்தது. அதனால் அழாமல் இருக்க முடியவில்லை அது குயிலைப்போலச் சோகமயமாகப் பாடியது. கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது.

அது எல்லையற்ற வான வெளியில் அலுப்படைந்த மனத்தோடு பறந்தது. இரவில் அது மரங்களில் தூங்கியது பகலில் அது பறந்து திரிந்தது விரும்பியபோது பாடியது. பசித்த போது காட்டு மரங்களில் உள்ள பழங்களைத் தின்றது. உடல் அழுக்காக இருந்த போது அது நீரோடையில் குளித்தது. அது இப்போது கூண்டில் அடைபட்டிருக்கவில்லை. அது விரும்பியதை எல்லாம் செய்யமுடிந்தது. சூழலில் நிகழும் துரதிஸ்டம் மிக்க செயல்களைக்கண்டால் அது கவலைப்பட்டது. துயரம் நிறைந்த குரலில் பாடியது. அவ்வாறு பாடும் போது சூரியனைக்கண்ட பனிபோல் அதன் துயரங்கள் மறைந்தன. பாடவிட்டால் அது திக்குமுக்காடியது. அப்போதுதான் பாடுவது கருத்துள்ளதாகவும் ஆர்வம் மிக்கதாகவும் இருப்பதை அது தெரிந்துகொண்டது. அது தனக்காகவே பாடியது. ஒருசிலரை மட்டும் மகிழ்வூட்ட அது பாடவில்லை.

வானம்பாடியின் இனிய குரலிசை காற்றில் பரந்து எங்கும் சென்றது. ஆலைத்தொழிலாளர், வயலில் வேலை செய்யும் உழவர்கள், நெசவு செய்யும் பெண்கள், மனிதனை வண்டியில் வைத்து இழுக்கும் மனித மாடுகள் முதலியோர் மட்டுமன்றி மனிதனுக்காக உழைக்கும் விலங்குகளும் வானம் பாடியின் இன்னிசையைக் கேட்டு ஆறுதலடைந்தன. களைப்பையும் கவலையையும் மறந்தன; ''வானம்பாடி எவ்வளவு அருமையாகப் பாடுகிறது. அதன் குரல் தேன்போல இனிக்கிறது'' என்று அவர்கள் அதனை நோக்கி மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

முற்றிற்று

(இக்கதை The Scarecrow என்ற சினத்துச் சிறுவர் கதைத் தொகுதியில் உள்ள The Thrush என்ற கதையின் மொழியாக்கமாகும். மூல ஆசிரியர் : Yeh Sheng- Tao

# நட்சத்திரக் கதை

நிலா உதித்தது. பொன் நிலவு. கண்ணன் அண்ணூர்ந்து பார்த்தான். ஒரே நட்சத்திரக் குவியல். அவை கண் சிமிட்டின. கதை பேசின. கண்ணன் பாடினுன்.

பொன் நிலவே ஓடிவா
பூச் சொரிந்து ஓடிவா
வெள்ளை மணல் மீதிலே
வீற்றிருக்க ஓடிவா.

அப்பா அங்கே வந்தார். நட்சத்திரக் கதையைத் தொடங்கினுர். வான் வெளி மிகவும் பரந்தது. அதற்கு எல்லை யில்லை. இதோ பார் நாங்கள் யோசிக்கின்ருேம். கற்பனை செய்கின்ருேம். அவற்றுக்கு எல்லேயே இல்லை. அப்படித்தான் அந்த வான் வெளிக்கும் எல்லை இல்லை.

## அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா ஜெயராசா

அங்கம்: 4

பல கோடி நட்சத்திரங்கள். அவற்றை எண்ணிக்கொண்டே போகலாம். மேலும் மேலும் எண்ணலாம். நட்சத்திரங்களில் இருந்து ஒளி வருகின்றது. அந்த ஒளி காற்று மண்டலத்திலே சிதறுகின்றறு. அப்போது அவை கண்சிமிட்டுவது போலத் தெரியும். நட்சத்திரங்களுக்கு வெப்பம் உண்டு. வெப்பம் மாற அவற்றின் நிறமும் மாறும்.

சூரியன் ஒரு நட்சத்திரம். அது பூமிக்கு மிகவும் கிட்டவுள்ள நட்சத்திரம். சூரியன் பூமியிலிருந்து சுமார் பதினைந்து கோடி கிலோ மீட்டர் தொலைவில் உண்டு.'' என்ருர் அப்பா.

''அத்தனை பெரிய தூரத்தைக் கிட்ட என்று சொல்ல முடியுமா?'' என்று கண்ணன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

அப்பா சிரித்தார்! வானவெளி மிகவும் நீண்டது. சூரியனுக்குப் பலகோடி கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் ஏனைய நட்சத்திரங்கள் அமைந்துள்ளன. அதனுற் சூரியன் கிட்டவுள்ள தென்று கூறுகின்ருேம்.

நட்சத்திரங்களின் தூரங்களைக் கணக்கிட ''ஒளியாண்டு'' என்ற அளவீட்டைப் பயன்படுத்துகின்ருேம். ஒளி ஒரு வினுடிக்கு 3 இலட்சம் கிலோ மீட்டர் தூரத்திற்குப் பாய்ந்து செல்லும். அப்படியானுல் ஓராண்டுக்கு எவ்வளவு தூரம் பாய்ந்து செல்லும் என்பதை விளக்குவதே 'ஒளியாண்டு' என்பதாகும்.

நட்சத்திரங்கள் கூட்டங் கூட்டமாக அமைந்திருக்கும் சூரியன் பூமி முதலியவை ''ஆகாய கங்கை'' என்ற கூட்டத்திலே அமைந்திருக்கின்றன. நட்சத்திரக் கூட்டங்களிலே மிகவும் பெரியதை ''சப்தரிசி மண்டலம்'' என்பர். அக்கூட்டத்தின் நடுவிலிருந்து ஒளி வீசுவது ''வசிட்ட நட்சத்திரம்'' எனப்படும். அதன் அருகேயிருப்பது அருந்ததி நட்சத்திரம்.

நட்சத்திரங்களுக்குச் சுய ஒளி உண்டு. அதாவது தாமாக ஒளி வீசக் கூடியவை: ஆனுல் கோள்களுக்கு அவ்வாருன சுய ஒளி இல்லை:

புராதன கிரேக்க வானவியல் விஞ்ஞானிகள் 48 நட்சத்திரக் கூட்டங்களைக் கண்டறிந்தனர். இன்றைய விஞ்ஞானிகள் 88 நட்சத்திரக் கூட்டங்களைக் கண்டறிந்துள்ளனர். என்றார் அப்பா.

''பூமி, செவ்வாய், புதன் போன்றவை நட்சத்திரங்களா?'' என்று கண்ணன் கேட்டான்.

''இல்லை. அவை நட்சத்திர மண்டலத்திலுள்ள கோள்கள்'' என்றார் அப்பா. அப்போது அம்மா தேநீர் கொண்டு வந்தார்.

தேநீரைக் குடித்துக் கொண்டு அப்பா கதையைத் தொடர்ந்தார்.

''நட்சத்திரங்கள் மிகவும் பெரியவை. கோள்கள் அவற்றோடு ஒப்பிடும் பொழுது மிகச் சிறியவை. ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். பூமி ஒரு **கோள்**. சூரியன் ஒரு நட்சத்திரம். சூரியன் பூமியை விட மூன்று இலட்சம் மடங்கு பெரியது. மேலும் நட்சத்திரங்களுக்குச் சுய ஒளி உண்டு. அதாவது தாமாக ஒளி வீசக் கூடியவை. ஆனால் கோள்களுக்கு அவ்வாறான சுயஒளி இல்லை.'' என்றார்.

கண்ணன் அண்ணாந்து பார்த்தான். அழகிய நட்சத்திரங்கள் மின்மினி போன்று தோன்றின. அவனுக்கு உற்சாகம் பிறந்தது. உரத்துப் பாடினான்:

''மின் மினியே ஓடிவா
மேக மெல்லாம் ஓடிவா
பொன் னொளிரும் வானத்தின்
பூக்களாக ஓடிவா''

''நட்சத்திரங்களின் அசைவுகளைக் கணிப்பது சுவையான கணிதம்'' என்றார் அப்பா.

கதை முடிப்போம்: 1

## கதை முடிந்தது இப்படித்தான்

யாதவன் வாளியைக் கொண்டு கிணற்றடிக்கு ஓடினான். நண்பர்களும் அவனைத் தொடர்ந்து ஓடினார்கள். யாதவன் கயிற்றை வாளியில் கட்டினான். வாளியைக் கிணற்றுள் விட்டுத் தண்ணீரை அள்ளினான். நீரைக் குழிக்குள் ஊற்றினான். மீண்டும் நீர் அள்ளிவந்து ஊற்றினான். பலமுறை இப்படிச் செய்தார்கள்.

இறுதியில் குழி நிறைந்தது. பந்து நீரின்மேல் மிதந்தது. யாதவன் பந்தை எடுத்து நண்பரிடம் கொடுத்தான்.

எல்லோரும் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார்கள். யாதவனின் கெட்டித்தனத்தை எல்லோரும் பாராட்டினார்கள்.

எல்லோரும் மீண்டும் விளையாடத் தொடங்கினார்கள்.

மூலம்: *''Getting a ball out of a hole''*
*Weighing an Elephan*
அயல்மொழிப் பதிப்பகம்,
பீக்கிங், சீனு (1981)
தாமிழாக்கம்: ''கூடலான்''

★ ஒரே இனிங்சில் ஆகக்கூடிய ஓட்டங்களைப் பெற்றவர் மேற்கிந்திய அணியைச் சேர்ந்த *Sri Garry Sobbers* இவர் பெற்ற ஓட்டங்கள் ஆட்ட மிழக்காத 365 ஓட்டங்கள். இச் சாதனை பாகிஸ்தான் அணிக்கு எதிராக ஏற்படுத்தப் பட்டது. 200 விக்கெட்டுக்களையும் கைப்பற்றி 8000 ஓட்டங்களுக்குமேல் அடித்த ஒரேயொரு ஆட்டக்காரரும் இவரே.

# கிரிக்கெட் காய்ச்சல்

**வி. சிவானந்தநாயகம்**

**தமது பிள்ளைகள் கிரிக்கெட் ஆட வேண்டும், எதிர்கால டெஸ்ட் வீரர்களாக அவர்களை உருவாக்க வேண்டும் என்று அலைவதைக் "கிரிக்கெட் காய்ச்சல்" எனலாமா?**

பலவகையான காய்ச்சல்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இப்போது கொழும்புச் சமுதாயத்தைப் பாதித்திருப்பது ஒரு புது விதக் காய்ச்சல் - கிரிக்கெட் ''காய்ச்சல்.''

இது ஒன்றும் முற்றிலும் புதிதாகப் பரவிவிடவில்லை. உயர்மட்டச் சமுதாயத்தில் பரம்பரை பரம்பரையாகக் காணப்படுவது உண்மைதான். மூன்றாவது பரம்பரை, நான்காவது பரம்பரை என மார்பைத் தட்டிக் கொள்ளும் கிரிக்கெட் குடும்பங்கள் பல கொழும்பில் இன்றும் உண்டு.

ஆனாலும் சிறீலங்காவிற்கு சர்வதேசத் தராதரம் கிடைத்ததோ இல்லையோ, காய்ச்சல் முழுமூச்சாகக் கொழும்பு முழுவதும் பரவிவிட்டது. அது தான் போதாதென்று டெலிவிஷனும் வந்தது, நோய் கட்டுக்கடங்காமல் போய்விட்டது.

ஒவ்வொரு தந்தையும், ஏன் தாயும் கூட, தனது பிள்ளையில் ஒரு வருங்கால டெஸ்ட் வீரனைப் பார்க்கின்றனர். ஒரு விவியன் ரிச்சட்ஸ்... ஒரு இயன்போத்தம்... ஒரு கபில் தேவாக எனது மகன் உருவாக மாட்டானா என்பது தான் அவர்களின் ஏக்கம்.

அப்படி உருவாக்க அவர்கள் அலையாமல் அலைகின்றனர். துடியாய்த் துடிக்கின்றனர். கனவிலும் நினைவிலும் சிந்தனை, இலட்சியம் எல்லாமே அதுதான்.

கனிஷ்ட பிரிவுக் கிரிக்கெட் போட்டி யொன்று நடைபெறுகின்றது என்று வைத்துக்கொள்வோம். இரு குழுக்களிலுமுள்ள வீரர்களின் பெற்றோர் குடும்பமே புடை சூழ மொய்த்து விடுகின்றனர்.

சில வேளைகளில் செல்லமான நாய்க்குட்டி கூட கார் யன்னலினூடு சின்ன எசமானின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருக்கும். பயிற்சிகள் நடைபெறும் போதே குடும்பம் படையெடுக்கும் போது, போட்டி என்றால் கேட்கவா வேண்டும்.

பிள்ளைகள் கிரிக்கெட் ஆடுவதை இராப்பகலாகப் பார்த்துக் கொண்டு திரிகிறார்களே இவர்களுக்கு என்ன வேலை வெட்டி இல்லையா என நாம் நினைக்கலாம். சிலர் சொந்த 'பிஸ்னஸ்' உள்ளவர்கள் உதவியாளர்களிடம் விட்டுவிட்டு வந்து விடுகின்றனர். வேறு சிலர் வர்த்தக நிறுவனங்களில் பணிபுரிபவர்கள். அங்கும் சலுகை கிடைக்கின்றது. சில அரச ஊழியர்களும் இச்சலுகையைப் பெறுகின்றனர் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

கல்லூரிக் குழுவில் இடம் கிடைக்காவிட்டால் என்ன செய்வது? கவலைப்படேல். ''பிறைவேற் கோச்சிங் கிளாஸ்'' இருக்கவே இருக்கின்றது.

அதென்ன ''கிளாஸ்'' என்று நீங்கள் சிந்திக்கலாம்.

இப்போதெல்லாம் மூலைக்கு மூலை காளானைப் போல் முளைத்திருப்பது இந்தப் பிரத்தியேக கிரிக்கெட் பயிற்சி வகுப்புக்கள்தான். ஏதோ கொஞ்சம் கிரிக்கெட் விளையாடத் தெரிந்தால் போதும், ஒரு கிரிக்கெட் வகுப்பை ஆரம்பித்து வைத்து ஜமாய்க்கிறார்கள். கட்டணமும் அதிகம்.

பாடசாலையிலிருந்து வந்த பிள்ளை அவசர அவசரமாக 'கிற்பாக்'கையும் துடுப்பையும் தூக்கிக்கொண்டு புறப்பட வேண்டியதுதான். எங்கென்று கேட்கிறீர்கள்? வேறெங்கே, பிரைவேட் கோச்சிங் கிளாசுக்குத் தான்.

இந்த ''கிற்பாக்'' சமாச்சாரம் புரியவில்லையா? அது தான் காற்காப்பு (Pad)' கையுறை (Glouse) போன்ற கிரிக்கெட் உபகரணங்கள், பயிற்சியின்போது அணியும் உடை இவற்றைக் கொண்டு செல்லும் ஒரு பெரியபை. துடுப்பும் அதற்குள் வைக்கப்படும். கைபிடி மட்டும் வெளியே எட்டிப் பார்த்துக்

கொண்டிருக்கும். இதையும் தோளில் மாட்டிக்கொண்டு திரிவதுதான் இன்றைய கொழும்பு "பாஷன்."

தம் பிள்ளைகளைக் குழுக்களில் இடம்பெறச் செய்ய ஆசிரியர்களுக்குக் கடும் நெருக்கடி கொடுக்கின்றனர் பலர். பண வலிமை முதல் அரசியல் அதிகாரம் வரை பல அஸ்திரங்களை ஏவுகின்றனர். எல்லா ஆசிரியர்களும் இவர்களுக்கு மசிந்து கொடுக்கமாட்டார்கள் தான்.

நடுவர்களிடம் செல்வாக்கைப் பிரயோகித்துத் தமது பிள்ளைகளுக்குச் சார்பாகத் தீர்ப்பு வாங்க முயலும் பெற்றோர்களும் இருக்கிறார்கள்.

மொத்தத்தில் கிரிக்கெட் "காய்ச்சல்" முற்றிவிட்டது. உச்ச நிலையை அடைந்துவிட்டது. சன்னியாக்கா விட்டால் சரிதான்.

❋ ❋ ❋

கிரிக்கெட் ஆட்டத்தில் துடிப்பெடுத்தாடும் கோஷ்டிக்கு அத்திவாரமாக அமைவது முதலாவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டம் டெஸ்ட் போட்டிகளின் இந்த முதலாவது விக்கெட் இணைப்பாட்ட உலகசாதனையை படைத்தவர்கள் இந்திய வீரர்கள் 1955-56ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிராக சென்னையில் இடம் பெற்ற டெஸ்ட் போட்டியில் வினுமன்காட்டும் பிரணுப்ரேயும் சேர்ந்து 413 ஓட்டங்களை பெற்றனர். வினுமன்காட் 231 ஓட்டங்களையும் பிர்ணுப் 173 ஓட்டங்களையும் பெற்ருர்கள்.

# விருது பெற்ற சாரணன்




சுன்னுகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி 11ம் ஆண்டு மாணவன் செல்வன் ப. முருகானந்தன் சாரணர் தலைவர்களுக்கான ஜனுதிபதி சின்னத்தை பெற்றுள்ளார்.

சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவரான இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரர். பாடசாலையிலும் வட்டார ரீதியிலும் நடைபெறும் பல விளையாட்டுக்களிலும் பங்குபற்றி வெற்றியீட்டி பெருமை தேடித் தந்துள்ளார்.

- சர்மா மாஸ்டர்

யோகாசனம் பயில்வீர்.



# பத்மாசனம்

முதலாவது மத்மாசனம். இதைச் செய்யும் விதம் சமமான தரையில் விரிப்பில் அமர்ந்து இரு கால்களையும் நீட்டி வலதுகாலை மடக்கி இடது தொடையின்மேல் குதிக்கால் அடிவயிற்றில் படவைக்கவேண்டும். இரண்டாவது இடதுகாலை மடக்கி வலது தொடையின் மேல் வைத்து நிமிர்ந்து இருத்தல்வேண்டும்


கண்களை மூடித் தியானத்தில் இருக்கும்போது நெற்றி புருவ மத்தியை மனக்கண்ணுல் பார்த்து மனதை அடக்கி வேறெங்கும் செல்லாமல் பாதுகாக்க வேண்டும். ஆசனத்தில் இருக்கும்போதும் மூச்சை இழுத்து விடும்போதும் 'ஓம்சாந்தி' என உச்சரிக்கவும் ஒரு நிமிடம் முதல் ஐந்து நிமிடம் வரை இருக்கலாம்.

**நலம் அடையும் உறுப்புக்கள்:**

சுவாசப்பையை நேராக இருக்க வைக்கிறது. அதிகமான பிராணவாயு உள்ளே செல்லும். முதுகு எலும்பு உறுதி அடைகிறது. இரத்த நரம்புகள் துரிதமாக வேலை செய்கின்றன. நல்ல ஞாபகசக்தியும் ஏற்படுகிறது. ஆயுளை அதிகரிக்கின்றது. முதுகுக்கூனலை அகற்றி நிமிர வைக்கிறது.

'ஓம் சாந்தி'

- சனு சொக்கலிங்கம்




"பொதுப்பணியில் ஈடுபடுகின்றவர்களில் ஒரு சிலர் நேர்மையற்றவர்களாக இருப்பதனுல் சமுதாயம் எல்லோர் மேலும் சந்தேகக் கண்கொண்டுதான் பார்க்கும்." என்ற எண்ணம் மனத்தில் தோன்றவே மனம் மீண்டும் வைராக்கியம் பெறுவதைக் குட்டிமாமாவினுல் உணர முடிந்தது.

எடுத்த காரியத்தை எத்தனை இன்னல்கள் கஷ்டங்கள் ஏற்பட்ட போதிலும், அவற்றுக்கெல்லாம் முகங்கொடுத்து நிறைவேற்றியே தீரவேண்டுமென்ற மனத்துணிவை ஏற்படுத்திக்கொண்ட குட்டிமாமா சடாசிவச் சட்டம்பியாரைப் பார்த்தபடியே இருந்தார்.

"நீர் ஒண்டுக்கும் யோசியாதை தம்பி, உம்மிலை எங்களுக்குப் பூரண நம்பிக்கை உண்டு." என்று சடாசிவச் சட்டம்பியார் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த குட்டிமாமாவின் கண்களிலிருந்து இரண்டு சொட்டு கண்ணீர் விழுந்தது.

"என்ரை அண்ணர் மயில் வாகனத்தார் நல்ல காரியத்திற்குத்தான் பயன்படவேண்டுமென்று சொல்லி பள்ளிக்கூடத்திற்குமுன்னலை இருக்கின்ற பத்துப் பரப்புக் காணியையும் எனக்கு எழுதித்தந்தவர். இண்டைவரையும் அந்த விடயம் ஒருவருக்கும் தெரியாது." என்று மாணிக்க நடராசர் கூற "எந்தக்காணி? சட்டம்பியார்" என்று கந்தையர் கேட்டார்.

"இப்ப பொடியங்கள் விளையாடிக்கொண்டு திரியுதுகள் அந்தக்காணிதான் மயில்வாகனத்தாருடையது. எனக்கு நல்லாய்த் தெரியும்" என்ருர் சடாசிவச் சட்டம்பியார்.

"அப்ப காணி கிடைச்சு விட்டுது" என்று கந்தையர் மாணிக்க நடராசரைப் பார்த்தார்.

"ஏதோ நல்ல காரியத்திற்கு என்றபடியால் அண்ணற்ரை விருப்பப்படி அதை எழுதித்தாறன் என்று மாணிக்க நடராசர் கூறியதும். ஆனந்த மேலீட்டால் அவற்றை] கால்களைப் பிடித்து குட்டிமாமா கும்பிட்டார்.

"எழும்புதம்பி" செய்ய வேண்டியதைத்தான் நான் செய்தநான்வேறுஒண்டுமில்லை' என்று] குட்டிமாமாவை பிடித்து தூக்க முயன்ருர். அவரால் தூக்க முடியவில்லை.

ஒருவாறு குட்டிமாமாவை எழுந்திருக்கச் செய்துவிட்டு பின்வருமாறு மாணிக்க நடராசர் கூறலானுர்.

"ஒரு ஆளிட்டையோ அல்லது இரண்டு பேரிட்டையோ காசு வாங்கி கட்டடம் கட்டுவது அவர்களுக்கு விளம்பரமே தவிர ஒரு மனத்திருப்தி ஏற்படாது. இந்தக் கிராமத்திலுள்ள ஒவ்வொ[illegible]வரிடமும் ஒருசதம் எண்டாலும் வாங்கி எல்லோருடைய பொதுச் சொத்தாகவும் பாடசாலைக் கட்டடத்தைக் கட்டி முடிக்கவேண்டும். அப்பொழுது தான் எல்லோருக்கும் எங்கள் பள்ளிக்கூடம் என்ற உணர்ச்சி ஏற்பட்டு பாதுகாப்பாக வைத்திருப்பார்கள். இந்த நல்ல உணர்ச்சியை எங்கடை மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்.

என்று கூறிமுடிக்க சடாசிவச் சட்டம்பியாரும் 'அதுதான் சரியான முறையும் கூட'' என்ருர்.

மாணிக்கச் சட்டம்பியார், அவருடைய மனைவியார், சடாசிவச் சட்டம்பியார், கந்தையர், கந்தையருடைய மனைவி பறுவதம், குட்டிமாமா எல்லோரும் சேர்ந்து அந்தக் கிராமத்திலுள்ள எல்லா வீடுகளுக்கும் போவதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஒரு நாளைக்கு ஒவ்வொரு பக்கம் போய் கட்டட நிதிக்குக் காசு சேர்ப்பதென முடிவுக்கு வந்தார்கள்.

சென்ற இடங்களெல்லாம் கிராமத்து மக்கள் இன்முகம் காட்டி வரவேற்ற காட்சியைப் பார்க்கும்போது குட்டிமாமா மெய்சிலித்து நின்ருர்.

## தொடர் நவீனம்

தங்களால் இயன்ற தொகையை புத்தகத்தில் பதிந்துவிட்டு சிலர் உடனேயே கொடுத்தார்கள், சிலர் ''புகையிலை, உருளைக்கிழங்கு விற்றதும் தாறம்'' என்று தங்கள் ஏலாமையிலும் நம்பிக்கையுடன் கூறிய அந்தவார்த்தைகள் வந்தவர்களை உச்சாகமூட்டச் செய்தன.

அன்று பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம். பாடசாலை அதிபர் நடராசா தலைமையில் ஆரம்பமாகியது. முன்வரிசையில் மாணிக்க நடராசர், சடாசிவச் சட்டம்பியார், குட்டிமாமா, கந்தையர் ஆகியோர் அமர்ந்திருந்தனர். மற்றும் அவ்வூர் மக்கள் பலரும் கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்தனர்.

''பாடசாலையின் அபிவிருத்தியில் ஊர்மக்கள் காட்டும் அக்கறையையும் ஒத்துழைப்பையும் பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்'' என்று அதிபர் தனது ஆரம்ப உரையில் கூறினுர். அவரைத் தொடர்ந்து பேசிய மாணிக்க நடராசர் ''எங்கள் ஊர்மக்களில் அநேகமானவர்கள் கமக்காரர்களாக இருந்தும் தங்கள் பிள்ளைகளைக் கல்விமான்களாக்க வேண்டும் என்ற நல்ல நோக்கம் கொண்டவர்களாக இருப்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே பெருமகிழ்ச்சியடைகின்றேன். பாடசாலைக் கட்டட நிதிக்காகப் பணம் சேர்க்க உங்கள் வீடு தேடி வந்தபோது நீங்கள் தந்த உற்சாகம் என்னையும் இளைஞனாக நின்று செயல்பட வைத்துவிட்டது. தம்பி குட்டிமாமாவை இந்த இடத்திலே போற்றிக் கௌரவிக்க வேண்டியது எங்கள் எல்லோருடைய கடமையாகும். அவருடைய விடாமுயற்சியால்தான் இந்தக் கிராமும், எங்கள் பாடசாலையும் பெருமையடைந்து நிற்கின்றது.'' என்று கூறி முடித்தார்.

அதைத் தொடர்ந்து அபிவிருத்திச்சங்க புதுவருட அலுவலர் தெரிவு நடைபெற்றது.

தலைவர், செயலாளர் தெரிவைத் தொடர்ந்து பொருலாளராகக் குட்டிமாமா ஏகமனதாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவர்மேல் அவ்வளவு நம்பிக்கையை அவ்வூர் மக்கள் வைத்திருந்தனர்.

மாணிக்க நடராசார் கொடுத்த காணியில் வடக்குப் பக்கமாக விளையாட்டு மைதானம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. குட்டி

## அங்கம்: 4

மாமாவின் தலைமையில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், அவ்வூர் மக்கள் எல்லோரும் சேர்ந்து சிரமதானத்தின்மூலம் விளையாட்டு மைதானத்தைச் சிறந்த முறையில் அமைத்து முடித்தார்கள்.

அன்று பாடசாலை விழாக் கோலம் பூண்டிருந்தது. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள், ஏன் அவ்வூர் மக்கள் எல்லோருமே உற்சாகத்துடன் காணப்பட்டனர். வைரவர் கோயில் சந்தியிலிருந்து மேளதாளங்கள் சகிதம் கல்விப்பணிப்பாளரும், வட்டாரக் கல்வி அதிகாரியும் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். பாடசாலை வாசலில் மாணிக்க நடராசரும், சாடாசிவச் சட்டம்பியாரும், கந்தையரும், குட்டிமாமாவும் அன்புடன் அவர்களை வரவேற்றனர்.

பாடசாலை இரண்டுமாடிக் கட்டடத்திற்கான அத்திவாரம் அன்று போடப்பட்டது. கல்விப் பணிப்பாளரும், குட்டிமாமாவும் அத்திவாரக் கல்லை வைத்து ஆரம்பித்தனர்.

அன்று திங்கட்கிழமை குட்டிமாமா வழமைபோல் தனது வண்டியில் சாமான்களை ஏற்றிக்கொண்டு சுன்னுகச் சந்தையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது கந்தையர் பதட்டத்துடன் ஓடி வருவதை அவதானித்த குட்டிமாமா பிடி கயிற்றை இழுத்துப்பிடித்தபடி வண்டிலை நிற்பாட்டினுர்.

''எங்கடை மாணிக்கச் சட்டம்பியாரல்லோ!'' என்று கூறியபடி கந்தையர் சாய்ந்து விழுந்து விட்டார்.

(வளரும்)

# விளையாட்டு வெற்றிக்காக மட்டுமல்ல

இறைவன் நமக்கு அற்புதமான ஆன்மாவையும், அழகான உடலையும் தந்திருக்கிறார். நாம் அவற்றைப் புனிதமாகவும், ஆரோக்கியமாகவும் காப்பாற்ற வேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறியுள்ளனர். முன்னர் வாழ்ந்த பெரியோர்கள் எவனொருவன் உயிருள்ளவரை தேக ஆரோக்கியத்துடன் வாழ்கிறானோ அவனே பெரும் பாக்கியசாலி. உடற் பிணியோடு மாளிகையில் வாழ்வதிலும் பார்க்க உடல் நலத்தோடு குடிசையில் வாழ்வதே மேலானதாகும். ஆகவே விளையாட்டுக்கள் நமது உடலைப் பாதுகாத்து, உள்ளத்தைப் பண்படுத்தி, ஆரோக்கியத்துடன் வாழ வழி வகுக்கின்றது.

## விளையாட்டுத் துறை

விளையாட்டு வெற்றி பெறுவதற்காகவே என்று பலர் எண்ணுகின்றனர். ஆனால் அப்படி எண்ணுவது தவறாகும். விளையாட்டு மூலம் நாம் பல நன்மைகளைப் பெறுகிறோம் என்பதனை மறக்கக்கூடாது.

விளையாட்டுக்கள் பலவகைப்படுவன. வீட்டினுள்ளே இருந்து விளையாடும் விளையாட்டுக்களும் வீட்டுக்கு வெளியே விளையாடும் விளையாட்டுக்களும் உள்ளன. தனிப்பட்டவர்கள் பங்குபற்றும் விளையாட்டுக்களும், குழுக்களாகப் பங்குபற்றும் விளையாட்டுக்களும் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான நன்மைகளைச் செய்கின்றன.

தனியொருவனின் உடல் உறுதியாகவும், வலிமையுடனும் இருக்கவும், உடல் உறுப்புக்கள் தத்தம் வேலைகளைச் செவ்வனே செய்யவும் விளையாட்டுக்கள் உதவுகின்றன.

விளையாட்டுக்கள் தலைமை தாங்கும் பண்பையும், ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றுக்குக் கீழ்ப்படியும் தன்மையையும், தலைவனுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நற்பண்பையும், கூடிச் செயல் புரியும் கூட்டுணர்ச்சியையும், நேர்மையையும் மனமகிழ்ச்சியையும், சிந்தனைத் திறனையும் ஏற்படுத்துகின்றன.

**விளையாட்டு ஒருவனின் ஆளுமையை விருத்தி செய்து "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்ற சகோதரத்துவ உணர்வை ஊட்டும்.**

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற பழமொழியை மெய்யாக்கிவிட, குழு விளையாட்டுக்கள் பயன்படுகின்றன. சாதி, மத, மொழி வேறுபாடின்றி நடக்க வழி வகுக்கின்றது. நாட்டுப் பற்றை வளர்க்கின்றன. கிரிக்கெட், வலைப்பந்து, கூடைப்பந்து போன்ற

விளையாட்டுக்கள் குழு விளையாட்டுக்குச் சிறந்த உதாரணங்களாகும். ஆகவே இவற்றினுல் விளையாட்டுக்கள் வெற்றிக் காக மட்டுமல்ல என்பது புலனுகின்ற தன்ருே?

சில விளையாட்டுக்கள் மூளையைப் பயன்படுத்தி விளையாடுவன. உதாரண மாக 'செஸ்' என்னும் சதுரங்கம், 'கரம்' (Carrom), 'டாம்' போன்றன. இவ்விளையாட்டுக்கள் மூளையை விருத்தி செய்வதோடு உளவிருத்தியையும் ஏற் படுத்துகின்றன.

**பண்டைய மரபு**

விளையாட்டுக்கள் இன்று நேற்றல்ல, பண்டைக்காலம் தொட்டு முக்கியத்து வம் பெற்று வருவன. போர் வீரனைத் தெரிவு செய்யவும், மணமகனைத் தெரிந் தெடுக்கவும் விளையாட்டுக்களே முத லிடம் வகித்தன. உதாரணமாக அக் காலத்தில் யானையேற்றம், மற்போர், சிலம்படி, ஏறுதழுவுதல், விற்போர் போன்ற விளையாட்டுக்கள் வீரர்களைத் தெரிவு செய்ய உதவின.

மாமல்லபுரத்தைக் கட்டியெழுப்பிய முதலாம் நரசிம்மவர்மன் மல்யுத்தத் தில் பலரையும் வெற்றிகொண்ட கார ணத்தாலன்ருே ''மாமல்லன்'' என்ற பெயரைத் தனதாக்கிக் கொண்டான். ஆகவே விளையாட்டுக்கள் வெற்றிக்காக மட்டுமல்ல என்பது நன்ருகப் புலப்படு கின்றது.

பல்வேறு வகைப்பட்ட விளையாட் டுக்கள், பாடசாலைகளில் இல்லங்களுக் கிடையேயும், ஒரு நாட்டில் பிரதேசங் களுக்கிடையேயும் நடைபெறுகின்றன. இவ்விளையாட்டுக்கள் மாணவர்கள், பல் வேறு இனத்தவர்கள் பல்வேறு நாட்ட வர் மத்தியில் நட்புறவை ஏற்படுத்தி சகோதரர்களாக வாழ வழி வகுக்கின் றன.

உடல், உள வளர்ச்சிக்கு உதவு கின்றன. கூட்டுறவு, ஒற்றுமை, கீழ்ப் படிதல், தலைவரை மதித்து நடத்தல் போன்ற மனிதப் பண்புகளை வளர்க் கின்றன. சாதி, மத வேறுபாடுகளைத் தகர்த்து ஒற்றுமையை ஏற்படுத்தி, ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்ற முதுமொழிக் கிணங்க மக்களை வாழ வழிகாட்டுகின்றன.

ஆகவே விளையாட்டு வெற்றிக்காக மட்டும் அல்ல.

**செல்வி க. கமலராணி**

*(''நாவலன்'' கையெழுத்து சஞ்சிகை 1986 வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.)*

## தங்கத் தோகை மயிலைப் பார்

தம்பி தம்பி அங்கே பார்
தங்கத் தோகை மயிலைப் பார்
கொண்டை மேலே பூவைப் பார்
கொத்தித் தின்னும் அழகைப் பார்

மழையைக் கண்டால் தோகை யினை
மகிழ்ந்து விரித்து ஆடிடு மாம்
பகையை உடைய பாம்பு தனை
பாய்ந்து கொத்திக் கொன்றிடு மாம்

பறந்து செல்லும் அழகைப் பார்
பச்சை நிறத்தின் எழிலைப் பார்
குழந்தை முருகன் அதில் அமர்ந்து
குவல யத்தை வலம் வருவான்

நீண்ட கழுத்து உடைய தாம்
நிமிர்ந்து நிமிர்ந்து பார்க்கு மாம்
ஏறி அதிலே நாங்க ளும்
இனிய சவாரி செய்ய லாம்

வ. யோகானந்தசிவம்

# இரு யப்பானியத் தவளைகள்

✱✱✱✱

ஹெலண் பேர்ண்ஸ்

முன்னொரு காலத்திலே யப்பான் நாட்டில் இரு தவளைகள் வசித்தன. ஒன்று கடலுக்கருகில் ''ஒசாக்கா'' என்ற நகரிலும், மற்றது ஆற்றருகில் உள்ள ''கியோட்டோ'' என்ற நகரிலும் வசித்தன. இவைகள் ஒரு பொழுதும் ஒருவரை ஒருவர் சந்தித்ததில்லை.

தவளைகளுக்கு ஒருகுறை ''கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளர்ப்பேன்'' என்று அடிக்கடி ஊரில் உள்ளவர்கள் சொல்லிக் கொள்வது கொஞ்சம் கூடப் பொறுக்கவில்லை.

எனவே ஒருநாள் ஒசாக்காவில் இருக்கும் தவளை தன் மனைவியிடம் ''ஊரில் உள்ளவர்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள் கேட்டியா? எனவே நான் ஒரு முறை கியோட்டோ வரையும் சென்று உலகத்தைப் பார்த்து வருகிறேன்'' என்று கூறிப் புறப்பட்டது.

அதே தினம் கியோட்டோவில் உள்ள தவளையும் தன் மனைவியிடம் ''நானும் ஒசாக்கா வரையும் சென்று உலகத்தைப் பார்த்து வருகிறேன்; இந்த மனிதர்கள் எங்களைக் கேலி செய்வதைப் பொறுக்கமுடியாது'' என்று கூறிப் புறப்பட்டுவிட்டது.

இரு நகரங்களுக்கும் நடு வழியில் ஓர் உயர்ந்த மலை இருந்தது. தவளைகள் இரண்டும் பல தடவைகள் தத்தித் தத்தி ஒருவாறு மலை உச்சியை அடைந்துவிட்டன. கியோட்டோ தவளை உச்சியை அடைந்த அதே சமயம் ஒசாக்கா தவளையும் உச்சியை அடைந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டனர். இருவரும் கைகுலுக்கி ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டனர். பின்னர் இருவரும் தாம் ஏன் வீட்டை விட்டுக் கிளம்பினர் என்று கூறினர். இருவருக்கும் நோக்கம் ஒன்று என்பதை அறிந்ததும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

''நான் சிறிது உயரமாக இருந்தால் இங்கிருந்தே கியோட்டோ நகரைப் பார்க்க முடியும்'' என்றது ஒசாக்காத் தவளை. உடனே கியோட்டோத் தவளை நாங்கள் இருவரும் எமது பின்னங்கால்களிலே எழுந்து நின்ருல் இந்த உயரமான மலையில் நின்றே நாம் போக வேண்டிய இடங்களைப் பார்த்துவிடலாம் என்று யோசனை கூறியது.

இது இருவருக்குமே நல்ல யோசனையாகப்பட்டது. உடனே இருவரும் ஒருவர் தோளில் மற்றவர் கைகளைப் போட்டு எழுந்து நின்றனர்.

ஒசோக்காவில் இருந்து வந்த தவளை தன்னுடைய மூஞ்சியைக் கியோட்டோ நோக்கியும் கியோட்டோவில் இருந்து வந்த தவளை ஒசாக்கோ நோக்கித் தன் மூஞ்சியையும் நீட்டி எட்டி எட்டிப் பார்த்தன.

ஆனல் அவைகள் ஒரு விடயத்தை மறந்துவிட்டன. தங்களுடைய கண்கள் பிடரியில் அமைந்திருந்ததை யோசிக்கவில்லை.

அவற்றின் மூஞ்சைகள் அவர்கள் போக வேண்டிய திசையில் இருந்த போதும், அவற்றின் கண்கள் அவர்கள் எங்கிருந்து வந்தார்களோ அதே திசையில் இருந்தன. அவைகளுடைய கண்களுக்கு இப்பொழுது நகரங்கள் தெரியத் தொடங்கின.

கியோட்டாத் தவளை இலேசாகச் சிரித்தவாறே 'மச்சான் ஒசாக்காவைப் பார்த்தேன் அது கியோட்டோ மாதிரியே இருக்கின்றது.

ஒசாக்காத் தவளையும் ''அதுதானே நானும் யோசித்தேன். கியோட்டோவைப் பார்த்தால் ஒசாக்கா மாதிரியே இருக்கு'' என்றது.

முட்டாள்கள் தங்களது கண்கள் பிடரியில் இருந்ததால் அவைகள் தங்கள் தங்கள் நகரங்களையே கண்டன என்பதை நினைத்துப் பார்க்கவில்லை.

உடனே இருவரும் ஒருவருடன் ஒருவர் கைகுலுக்கினர். இரு நகரங்களும் ஒரே மாதிரி இருப்பதால் தொடர்ந்து பிரயாணம் செய்வதில் ஒரு பிரயோசனமும் இல்லை என்று கூறியவாறே தத்தம் நகரங்களுக்குத் திரும்பினர். ✱

# தீர்ப்பு

அந்த ஊரின் பெயர் கரியூரிபுரம். ஏனெனில் அங்கு உள்ளவர்கள் யாவரும் கரியாகிய யானையின் தோலாலான ஆடைகளையே அணிந்தனர். அந்த ஊரில் கந்தசாமி என்ற பணக்காரன் இருந்தான். அவன்மகன் பெயர் தங்கவேல். தங்கவேல் மிகவும்பொறாமைக் காரன். அவனுக்குப் படிப்பு ஏறாது. மற்றவர்கள் துன்பப் படுவதில் இவனுக்கு ஆனந்தம்.

கந்தசாமியின் வீட்டுக்குப் பக்கத்தில் ரங்கன் என்ற ஏழை செருப்புத் தொழிலாளி இருந்தான். அவன் நல்லவன் அவன் மகன் பெயர் குமரன். குமரன் படிப்பில் கெட்டிக்காரன். இரக்கமுள்ளவன். தங்கவேலுவும் குமரனும் ஒரே வகுப்பிற் படித்தனர். குமரன் தன் நல்லகுணத்தால் மற்றவர்களிடம் பெயரும் புகழும் பெற்றான். இதனால் தங்கவேலுவுக்கு குமரனை பார்க்கப் பொறாமை அதிகரித்தது.

ஒருநாள் ரங்கன் கந்தசாமியிடம் ஓராயிரம் ரூபாய் கடன் வாங்கினான். அதைக் குறிப்பிட்ட திகதிக்கிடையில் ரங்கன் கொடுக்காவிட்டால் அவனுடைய தோலில் கந்தசாமிக்கு ஒரு செருப்புத் தைத்துத் தரவேண்டும் என்பது உறுதி. இப்படி இவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

ஒருநாள் குமரனும் தங்கவேலுவும் பாடசாலை விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது இடப்பக்கத்தில் ஒரு முணுமுணுப்புச் சத்தம் கேட்டது. அங்கு நாற்பது வயது மதிக்கத் தக்க ஒரு மனிதர் முணுமுணுத்துக் கொண்டு இருந்தார். அவரைப் பார்க்கக் குமரனுக்கு பரிதாபமாய் இருந்தது. தங்கவேலுவுக்கோ எரிச்சலாக இருந்தது.

குமரன் தங்கவேலிடம் “அம் மனிதருக்கு உதவி செய்வோமா? அவரைப் பார்க்கப் பரிதாபமாய் இல்லையா? என்றான்.'' “ தங்கவேலோ என்னால் முடியாது. நீ வேண்டுமானால் செய்'' என்று நடந்து சென்றான். குமரனும் அம் மனிதருக்குக் கிட்டச் சென்று பார்த்தான். அவரது உடல் காய்ச்சலால் அனலாகக் கொதிப்பதைக் கண்டான். உடனே அவரை மெல்ல எழுப்பி அழைத்துக் கொண்டு போய் வைத்தியசாலையில் காட்டி மருந்தெடுத்துக் கொடுத்தான். அம்மனிதரும் மகிழ்ந்து தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

அவர் அவ்வூர் நீதிபதியின் ஆருயிர் நண்பராவர்' அவர் குமரனிடம் ஒரு பேனாவைப் பரிசாக அளித்தார். அவனும் அதைப் பணிவுடன் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான். மறுநாள் பாடசாலையில் தான் உதவி செய்ததைக் கூறினான். ஆசிரியரும் மாணவர்களும் அவனைப் பாராட்டினர்.

இதைக் கண்ட தங்கவேலுவுக்கு பொறாமை பொங்கியது. அன்று வீடு வந்ததும் தன் தந்தையிடம் குமரனைப் பற்றியும் ரங்கனைப் பற்றியும் பொய்ப் புகார்களைக் கூறினான். கந்தசாமி ‘‘ நாளைக்கு ரங்கன் தான் தரவேண்டிய ரூ. 1000–பாக்கியையும் தரவேண்டும். அவனால் நாளை தரமுடியாது. அவமானப்படப் போகிறான் குமரனுந்தானே. நீ கவலைப் படாதே'' என்று ஆறுதல் கூறினான்.

மறுநாள் கந்தசாமி ரங்கனிடம் பணத்தைத் தரும் படி கூறினான். ரங்கனால் கொடுக்க முடியவில்லை. தன் நிலைமையைக் கூறிக்கெஞ்சினான். கந்தசாமியோ எவ்வளவு சொல்லியுங் கேட்காமல் நீதிபதியிடம் அழைத்துச் சென்றான்.நீதிபதி வழக்கைக் கேட்டார். அவரால் தீர்ப்புக் கூற முடியவில்லை ரங்கனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. ஆனால் உறுதிப்படி ரங்கனின் தோல் உரிக்கத்தான் வேண்டும். என்ன செய்வதெனத் தெரியாது யோசித்தான்.

செல்வி
பாரதி சுப்பிரமணியம்
(யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை)

அப்பொழுது அவரின் நண்பரான அம் மனிதரும் வந்திருந்தார்.அவர் உடனே எழுந்து ‘‘ நீதிபதியாரே வழக்கின்படி ரங்கனின் தோலெனும் போது அவனுக்குச் சொந்தமான வேறு தோலாகவும் இருக்கலாம்.'' என்று ரங்கன் வளர்க்கும் மிருகமொன்றின் தோலால் தைக்கப்பட்ட ஒரு செருப்பை கந்தசாமியிடங் கொடுத்தார். அவனால் பேச முடியவில்லை. தலைகுனிந்து நின்றான்.

ரங்கனோ அம்மனிதருக்கு நன்றி கூறி மகிழ்வுடன் வீடு திரும்பினான். ✶

# காலம் பொன்னானது

குமார் பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான் அவனுடைய இறுதி "விழா" க. பொ. த. சாதாரணப் பரீட்சை அந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் நடைபெறவிருந்தது. அந்தப் பரீட்சைதான் அவன் கல்வியைத் தொடர்வதைத் தீர்மானிக்கும்.

அவன் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற எண்ணத்தில் குமாருடைய தகப்பன் பயிற்சி புத்தகங்களை வாங்கி அவனது படிப்பறையில் நிரப்பிக் கொண்டிருந்தான்.

ஆனால் அவனுக்கோ படிக்க வேண்டும் என்ற எண்ணம் வரவேயில்லை. குமார் தனது நண்பர்களுடன் ஊர்சுற்றி அரட்டை அடிப்பதும், இரவில் தொலைக்காட்சி பார்ப்பதுமாக காலத்தைக் கழிக்கலானான். பரீட்சைக்கு இன்னும் ஆறு மாதங்கள் உள்ளன என நினைத்த அவனது பெற்றோர்கள், அவனுக்குப் பல புத்திமதிகளைக் கூறிப்படிக்குமாறு வற்புறுத்தினார்கள். அவனுக்கோ அப்புத்திமதிகள் யாவும் புறக்குடத்துநீர் போல பயனற்றதாக இருந்தன.

"பரீட்சைக்கு ஒரு மாதத்திற்கு முன்னர் படிச்சிட்டுப் போனால் போதும். உந்தச் சோதனைக்கு ஏன் நீங்கள் வீணாக மண்டையைப் போட்டு அடிக்கிறியள்" என்று குமார் தனது பெற்றோர்களுக்கு சர்வ சாதாரணமாகக் கூறினான்.

ஊர்சுற்றுவதும், படம் பார்ப்பதுமாக, அவனது காலம் கழிந்தது. பரீட்சைக்கு

## சிவா நந்தகுமார்

இன்னும் ஒருமாதம் இருக்கிறது என்ற கணக்கு வந்து விட்டது. அவனுக்கு அப்பொழுதுதான் புத்தகத்தைத் திறந்து படிக்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாகியது. புத்தகங்களைத் திறந்து கற்கத்தொடங்கினான். மாதக் கணக்காக விளையாடித் திரிந்த அவனால் எவ்வாறு பொறுமையாக இருந்து கற்க முடியும்? ஏதோ பல்லைக் கடித்துக் கொண்டு படித்தான். ஆனால் நீண்ட பாடத்திட்டத்தை ஒரு மாத எல்லைக்குள் படிக்க முடியாதவனாகத் திண்டாடினான்.

> ✶ 7000 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற வீரர்களின் விபரம் வருமாறு:
>
> சுனில் கவஸ்கார்— இந்தியா
>
> சேர். கரி சோபர்ஸ் மேற்கிந்தியா
>
> ஜியொவ் போய்கொட் இங்கிலாந்து
>
> கிரேய்க் சப்பல் அவுஸ்திரேலியா
>
> கினைவ் வோய்ட் மேற்கிந்தியா


பரீட்சையும் ஆரம்பமாகியது. ஒவ்வொரு பாடமாக நடைபெற்றது. அப்பாடங்களில் வந்த வினாக்கள் பாடத்திட்ட எல்லைக்குள்ளே அமைந்திருந்தன. ஒழுங்காக இருந்து படித்திருந்தால் இவை யாவற்றுக்கும் விடையளித்திருக்கலாம் எனக் குமாரின் மனம் அழுதது. இனி அவனால் என்ன செய்ய முடியும். பரீட்சையும் முடிந்து விட்டது, மூன்று மாதங்களின் பின்னர் பரீட்சை மறுமொழியும் வந்தது. மறுமொழியின் படி குமார் அந்தப் பரீட்சையிலே சித்தியடையவில்லை. எனவே அவன் உயர்தர வகுப்புப் படிப்பதற்கு வாய்ப்புக்கிட்டவில்லை.

இனியாவது படித்து அப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தர வகுப்பைப் படிக்க வேண்டும் என்ற அவா உந்தலினால் அடுத்த ஆண்டும் பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமானான் அடுத்த ஆண்டு முழுவதும் அவன் படிப்பிலே ஆழ்ந்திருந்தான் அரட்டை அடிப்பதையும் படம் பார்த்தலையும் முற்றாகக் கைவிட்டான். பொறுமையாக இருந்து படித்தான். எனவே அடுத்த ஆண்டுப் பரீட்சையிலே சித்தியடைந்து உயர்தர வகுப்பில் படிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

**காலம் பொன்னானது. அதை வீணடிக்காது கல்வி என்ற பெருஞ்செல்வத்தைப் பெறவேண்டும்.**

ஒரு வருடத்தை வீணாக்கி விட்டதாக குமார் எண்ணிக் கவலைப்பட்டான். இனிமேல் அவ்வாறு வீணாகாது கல்வியைக் கற்கவேண்டும் என்ற நோக்குடனும் அவன் தனது உயர்தரக் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கின்றான்.

# சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல



செல்வி க. தேவராணி
(இளையதம்பி தமிழ் வித்தியாலயம் வண்ணார்பண்ணை.)

விஞ்ஞான உலகில் மனிதன் வாழ்ந்து கொண்டு இருந்தாலும் மனிதனின் நல்வாழ்விற்குச் சமய அறிவின் துணை அவசியம்.

மனிதன் ஐந்தறிவு படைத்த விலங்குகளிலும் வேறுபட்டு, மேம்பட்டு நிற்பது ஆறாவது அறிவான பகுத்தறிவு அவனிடம் இருப்பதால் ஆகும். மனிதன் மனிதனாக வாழ அவனிடம் நல்ல பழக்க வழக்கங்கள் இருக்கவேண்டியது அவசியம். அதை அவனுக்குக் கற்றுக் கொடுப்பவள் தாய். அவளுக்கு அடுத்தபடியாக நல்ல பழக்க வழக்கங்களைப் போதிப்பது சமயந்தான்! 'தாய் தந்தையரே உலகம்' என்று எடுத்துக் காட்டிய விநாயகர், இராம அவதாரம் மற்றும் சைவநீதி தழைக்க அவதரித்த நாயன்மார்கள், இவர்களின் வரலாறுகள் நமக்கு நற்பழக்கங்களை போதிக்கின்றன.

தாய் தந்தையரை மதித்தல் (விநாயகர்), ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற கற்புநெறி (இராம அவதாரம்). விருந்தோம்பும் பண்பு (அப்பூதியடிகள், சிறுத்தொண்ட நாயனார்), நட்பு (சுந்தரர்) என்பனவும் இன்னும் பலசிறந்த பண்புகளும் புராணங்களும் நமக்குக் கற்றுத் தரும் பாடங்கள். ஒருவன் வாழ்வை நேர்மையாகக் கொண்டு செல்ல அன்றாடம் சமய நூல்களைப் படிப்பதும், அந்நூல்கள் கூறும் சமய வழி நடப்பதும் மிகவும் அவசியமாகின்றது.

இன்பமும் துன்பமும் மனித வாழ்வில் சகஜம். இன்பத்தைக் கண்டு துள்ளும் மனிதன், துன்பத்தைக் கண்டு துவளுகின்றான். மனிதன் மனம் சோர்ந்த வேளைகளில் அவனுக்கு மன ஆறுதலை அளிப்பது சிந்தனைகள்தான். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று அவன் மேல் துன்பப்பாரத்தைப் போடுவதால் மனிதனின் பாரம் சிறிது குறைவதை உணருகின்றான். அன்றாடம் துன்பத்திலும் ஒருவனுக்கு ஆறுதல் தெய்வ வழிபாடுதான் என்றால் மிகையாகாது.

'இறைவனே! உன் திருவருள் துணை எனக்கிருந்தால் நரகமானாலும் சரி அங்கே சென்று வாழ்வேன்'' என்று மாணிக்கவாசகர் சொல்லுகிறார். நரகம் புகினும் எல்லேன் திருவருள் இருக்கப்பெறின் இறைவா. இறைவன் திருவருள் இல்லாவிட்டால் இன்பலோகம் நரகலோகமாக இருக்கிறது. இறைவனுடைய நம்பிக்கையோடு வாழ்பவர்களுக்கு நரகம் சுவர்க்கமாகத் தோன்றுகின்றது. ஒரு சிறு துரும்பும் கோடரி

ஏழைகளின் பசியைப் போக்காதவன், பிறர் நன்மை கருதாதவன் திருவிழா நடாத்தி ஆண்டவன் அருளைப்பெறமுடியாது.

யாக இருக்கிறது என்பது உண்மையாகும்.

சிறுவர்கள் முறையாகச் சமய அறிவைப் பெறுவார்களேயானால் அது அவர்களைக் குற்றச்செயல்கள் செய்வதிருந்து தடுத்துவிடும். குற்றம் செய்ய நினைத்தாலும், தெய்வ பயமும், மனச்சாட்சியும் அந்த நினைப்பை அவர்கள் மனத்திலிருந்து நீக்கிவிடும். சட்டத்துக்கு அஞ்சி நடப்பதிலும் பார்க்கத்தெய்வத்துக்கு அஞ்சி நடப்பது மேல். எனவே ஒருவனைச் சரியான பாதையில் வழிநடத்துவது சமயமல்லவா? அதனால் சிறுவயதிலிருந்து சமயவழி ஒழுகப் பயிற்றப்படல் அவசியம். அது அவனை அன்றாடம் சரியான வழி நடத்திக் காக்கும் என்பது நிச்சயம்.

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமய அடிப்படையிலேயே வாழ்க்கை அமைய வேண்டும்.

பாலிலே தண்ணீரைக் கலந்து ஏமாற்றுபவன் பாலபிஷேகத்திற்குப் பால் அனுப்பிப்பிரயோசனமில்லை.

தொழிலாளரை வருத்தி அவர்களைச் சுரண்டி வாழும் முதலாளி, ஆலயங்களில் தற்புகழ்ச்சிக்காக அன்னதானம் கொடுப்பதால் பயனில்லை. பிறரை ஏமாற்றி கொள்ளை லாபம் பெறும் வியாபாரி கோயிற் திருப்பணிக்கு அன்பளிப்பு வழங்குவதால் புண்ணிமில்லை.

ஏழைகளின் பசியைத் தீர்க்காதவன், பிறர் நன்மை கருதாதவன் திருவிழா நடாத்தி ஆண்டவன் அருளைப் பெறமுடியாது.

மதம் என்பது வெறும் சாமியார் மடமல்ல, சந்நியாசிகளின் பாத்திரமல்ல என்பதை உணர வேண்டும்.

ஒவ்வொருவரும் அன்றாட வாழ்க்கையில் பொறாமை கோபம் சுயநலம் பேராசை முதலியவற்றை மனதிலிருந்து அறிவின் வலிமையாலும், ஆண்டவனின் நம்பிக்கையாலும் அகற்றி மனத்தைத் தூய்மைப் படுத்தி வாழ்வதே சமய வாழ்க்கை. இதுவே இறைவனது அருளைப் பெறுவதற்கு ஏற்றவழி.

'வையத்தில் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

## நீசரை நாம் எதிர்த்திடுவோம் தம்பி

புத்தாண்டு பிறந்ததடா தம்பி
புத்துணர்வு கொண்டிடுவோம் நம்பி
புத்தாடை புனைந்திடுவோம் தம்பி
பரமனை தொழுதிடுவோம் நம்பி
சொத்தாகும் கல்வியதைத் தம்பி
சிறப்பாக பயின்றிடுவோம் நம்பி
வித்தாகும் விடிவுக்கே தம்பி
வாருங்கள் ஒற்றுமை நம்பி!

சமயத்தின் நெறியினிலே தம்பி
சீராக வாழ்ந்திடுவோம் நம்பி
இதயத்தின் சாட்சியது தம்பி
இருப்பவர்கள் உயர்ந்திடுவர் நம்பி
உதயத்தின் காட்சியது தம்பி
உண்மையுடன் உழைப்பவர்க்கே நம்பி
இமயத்தின் மாட்சியது தம்பி
இவ்வுலகில் கண்டிடலாம் நம்பி!

ஆற்றல் மிகும் எம்கைகள் தம்பி
அறிவிநொளி சேர்ந்திடுவோம் நம்பி
மாற்றமுறும் இம்மண்ணும் தம்பி
மாண்புடனே தொழில் செய்தால் நம்பி
ஏற்றமெலாம் எமக்கேதான் தம்பி
ஏர்பிடித்து வாழ்ந்தாலே நம்பி
தோற்றமுறும் புத்தாண்டில் தம்பி
தொடர்வோமே துணிவுடனே நம்பி!
நீதி காட்டும் பாதையிலே தம்பி
நாம் வாழ்வோம் நிறைவாக நம்பி
நீதி கேட்கும் யாவருக்கும் தம்பி
நிச்சயமாய் அளித்திடுவோம் நம்பி
நீதி கேட்டும் இரங்காதார் தம்பி
நீசரை நாம் எதிர்த்திடுவோம் நம்பி
நீதி வாட்டும் அன்னவரைத் தம்பி
நலம் விளையும் என்றிருப்போம் நம்பி!

- நாயன்மார்க்கட்டு, ப. மகேந்திரதாசன்.

# அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப்போட்டி

## அட்டைப் பட ஓவியம்

அட்டைப் படத்தை அலங்கரிக்கும் ஓவியத்தை வரைந்தவர் யாழ் பரியோவான் கல்லூரி மாணவன் செல்வன் உ. செந்தூரன்.

இவர் யாழ்ப்பாணத்தின் பிரபல சிற்ப சித்திர வல்லுனர ன திரு. எஸ். சிவப்பிரகாசத்திடம் கலாச்சாரப் பேரவை நடத்தும் சித்திர சிற்ப பயிற்சி வகுப்புகளில் பயின்று வருகிருர்

பராம்பரிய ஓவியங்களையும் நவீன ஓவியங்களையும், வரையக்கூடிய ஆற்றல் உள்ளவர்.

அண்மையில் இந்திய வில் நடைபெற்ற உலக சித்திரக் கண்காட்சிக்கு கலாச்சாரப் பேரவை நான்கு ஓவியங்களை அனுப்பி இருந்தது.

இதில் இவரின் ஓவியமும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

லியோ கழகம் நடத்திய நத்தார் ஓவியப் போட்டியில் இவர் முதல் பரிசும் பெற்றுள்ளார். இவரது ஆற்றல் வளர நாமும் வாழ்த்துகிறோம்.

— ஆசிரியர்—

(5ஆம்பக்கத் தொடர்ச்சி)

**எங்களுக்கும்...**

யும் வைக்கவேண்டுமா என்ற எண்ணத்தால் ஏற்பட்ட கவலை அது?

''ஏன் அம்மா! நீங்கள் கஷ்டப்பட்டுத் தோச்சனீங்கள்? நான் வந்து தோய்ச்சுப்போட்டிருப்பனே?''

''இல்லை மோனை... உது பெரிய வேலையே? நீயும் பள்ளிக்கூடத்திலை படிச்சிட்டுக் களைச் சுத்தானே வாறனி? அதோடை நாளைப் பகலுக்குள்ளை காற்சட்டை காயாமல்விட்டால் என்ன செய்யிறது? அதுதான் தோய்ச்சுப் போட்டனுன்... சரி! சரி! முகம்கால் கழுவிக்கொண்டு சாப்பிடவா.''

சாப்பிடும்பொழுது நரேன் கேட்டான், அம்மா! நாளைக்குப் பரிசளிப்பு விழாவுக்கு வருவீங்களோ?

நான் என்னத்துக்குத் தம்பி. நான் இங்கையிருந்து கொண்டே நீ பரிசு வாங்கிறதை மனத்தாலை பார்த்துச் சந்தோஷப்பட்டால் போதாதே?

நரேனுக்குத்தாயின் மனம் புரிந்தது. அவள் பாடசாலைக்கு வரத்தயங்குவதன் காரணமும் விளங்கியது.

அவனை அறியாமலே அவன் கண்கள் கலங்கி இருதுளி நீர் அவனது உணவுத் தட்டில் விழுந்தது. அந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக்காதவளாய் நரேனின் தாய் ஏதோசாட்டுச் சொல்லியபடி எழுந்து வெளியே போனுள்.

தாய் திரும்பிவந்தபொழுது நரேன் முன்போலக் கலக்கத்தைத் காட்டாமல் சிரித்துக் கொண்டே, தாயைப் பார்த்துச் சொன்னுன். 'உடுப்பிலை என்ன இருக்கம்மா? உடுப்பே பரிசு வாங்கப் போகுது? நானல்லோ பரிசு வாங்கப் போறவன்? என்னைப் பார்த்து ஒரு தரும் சிரிக்க மாட்டினம். நீங்கள் ஒண்டையும் யோசியாதைங்கோ. எங்களுக்கும் காலம் வரும்.

# அர்ச்சுனு சிறுவர் வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுனு சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் "அர்ச்சுனு" வில் வெளியாகும் 5 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனுவில் வெளியாகும்.

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானுகவே எழுதினுர் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

## அர்ச்சுனு சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : செல்வன் / செல்வி ............

..............................................

..............................................

வகுப்பு : ..........................................

வயது: ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................

..............................................

வீட்டு முகவரி: ..................................

..............................................

மாணவர் கையொப்பம்: ..........................

..............................................

அதிபர் கையொப்பம்: ..............................

..............................................

அனுப்ப வேண்டிய முகவரி :-
ஆசிரியர்
" அர்ச்சுனு "
அஞ்சல் பெட்டி எண் : 23
யாழ்ப்பாணம்.

## அர்ச்சுனு சிறுவர் வட்ட உறுப்பினர்கள்

| பெயர் | உறுப்புரிமை எண் |
|---|---|
| செல்வன், தேவராசா நிர்மலன் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், யாழ்ப்பாணம். | 01 |
| செல்வன். கனகசிங்கம் இராகுலன் யாழ் புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம். | 02 |
| செல்வி.பாமினி யோகானந்தவேல் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி உடுப்பிட்டி. | 03 |
| செல்வி. சாவித்திரி சுப்பிரமணியம் தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், பருத்தித்துறை. | 04 |
| செல்வன் செந்தில்வேல் குமாரவேல் சிவகுரு வித்தியாலயம், வல்வெட்டித்துறை. | 05 |
| செல்வி. கேமலதா நடனசண்முகம் யாழ் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை யாழ்ப்பாணம் | 06 |
| செல்வன். டி. கே. இராசா அ. த. க. பாடசாலை வயாவிளான். | 07 |

செல்வன் சசிவர்ணன் பரிபூரானந்த சர்மா 08
இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம்.

செல்வி ஜெ. ஜீவா 09
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்.

செல்வி. தயாளினி தம்பிப்பிள்ளை 10
முருகமூர்த்தி வித்தியாசாலை,
உடுவில்.

செல்வி. விக்கினேஸ்வரி தம்பிப்பிள்ளை 11
மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
மானிப்பாய்.

செல்வி சுபாஷினி பரிபூரானந்த சர்மா 12
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்.

செல்வி, குலேந்திரராணி வைத்திலிங்கம் 13
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்.

செல்வி. குமுதினி வேலுப்பிள்ளை 14
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்.

செல்வி. மதனராணி அப்பையா 15
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்

செல்வன். யோகானந்தசிவம் குமரன் 16
திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் வட்டுக்கோட்டை.

செல்வன். பாலகிருஷ்ணன் யனந்தன் 17
வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

செல்வி.யோகமலர் செல்வநாயகம் 18
சோமஸ்கந்தா கல்லூரி
புத்தூர்.

செல்வன். எஸ். சிவதாசன் 19
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
கோப்பாய்.

செல்வி சத்தியசீலி தியாகராசா. 20
முருகமூர்த்தி வித்தியாசாலை
உடுவில்.


# கம்பியூட்டர் கல்வி

**COMPUTER PROGRAMMING IN BASIC LANG**

பயிற்சிக்காலம்: 40 Days

கட்டணம் ; 750/- மாத்திரம்

**COMPUTER PROGRAMMING IN DATA PROCESSING**

IN BASIC AND COBAL LANGUAGE

பயிற்சிகாலம்; 6 மாதம்

- O/L படித்த இருபாலாரும் சேரலாம்
- கூடிய நேர செய்முறை பயிற்சி
- I. B. M (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற (Diploma) சான்றிதழ் வழங்கப்படும்

**UNIKCO COMPUTERCENTRE**

No:5 மின்சாரநிலைய வீதி 2ம் ஒழுங்கை
யாழ்ப்பாணம். (உபதபாற்கந்தோர் அருகாமை)

# ஒரு பாடசாலையின் கதை

பேட்டி
செல்வி. இ. சுலோசனா

> **தென்னாசியாவில் உருவான – விடுதி வசதி அமைந்த முதல் பெண் பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி ஆகும்.**

**1820** ஆம் ஆண்டு. அது போத்துக்கேயர் காலம் அப்போது இங்கு வந்த அமெரிக்கன் மிஷனரிமார் வினன்சிஸ்கன் குருமாரால் கட்டப்பட்டு அழிந்து கிடந்த ஒரு கல் வீட்டையும், அதற்கு அருகில் ஓர் ஆலயத்தையும் கண்டனர். மிஷனரியராகிய உவின்ஸ்லோ ஐயரும், அம்மையாரும் தாங்கள் குடியிருக்கத் தக்தாக அந்த வீட்டையும், ஆலயத்தையும் திருத்தினர்கள். அவ்வாறு திருத்திய வீட்டில் சாலொமோன் என்னும் பெயருள்ள தமிழ் ஆசிரியரின் உதவியுடன் ஒரு பாடசாலை ஆரம்பமாகியது.

பெண்கள் கல்வி புறக்கணிகப்பட்ட அந்தக்காலத்தில் எதிர்நீச்சல் அடித்து 1824ஆம் ஆண்டில் பெண்கள் பாடசாலை அமெரிக்கன் மிஷனல் ஆரம்பிக்கப்பட்டது. அதுவே உடுவில் மகளிர் கல்லூரி ஆகும்.

தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை முதலிய இடங்களில் படித்துக் கொண்டிருந்த 29 பெண்கள் முதலில் இங்கு சேர்ந்தனர். 1839 இல் இந்த எண்ணிக்கை 55ஆக உயர்ந்தது,

இப்பாடசாலையின் முதல் அதிபராக உவின்ஸ்லோ அம்மையார் பொறுப்பு ஏற்றார். இவர் காலமானதைத் தொடர்ந்து 1833இல் லீவாய் ஸ்பேல்டிங் ஐயரும் அம்மையாரும் அனுப்பப்பட்டார்கள் இக்காலத்தில் தமிழுடன் ஆங்கில போதனையும் ஆரம்பமாகியது. பின்னர் 1837 இல் திரு. நதானியல் நைல்ஸ் அதிபரானார். 10 ஆண்டுகளின் பின்னர் 1847 இல் திரு. ஜே. எல். ஆர்னல்ட் இப்பதவியை ஏற்றார்.

1839 இல் இங்கு சேவைக்கு வந்த அக்னூ என்ற வாலிப ஸ்திரி மிஷனரி காலத்தில் மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கும் முறை ஆரம்பமானது. 1880 இல் செல்வி எஸ். ஆர். அவுலந்து அதிபரானதும் பிறநாடுகளில் இருந்து அறக்கட்டளையாகவும், உபகாரச் சம்பளமாகவும் உதவிகள் பாடசாலைக்குக் கிடைத்தன.

1911 இல் செல்வி லூ. புக்வால்டர் அம்மையார் மிஷனரியாகப் பொறுப்பு ஏற்றதும் பாலர் பாடசாலைக் கட்

1940 ஆம் ஆண்டு பாடசாலை நிர்வாகத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. முதன் முதலாக நமது நாட்டுப் பெண்கள் நிர்வாகிகளாகப்

டிடம் திறக்கப்பட்டது.

பொறுப்பு ஏற்றார்கள். செல்வி க. அ பரமசாமி அதிபராகி ஏறத்தாழ 30 ஆண்டுகள் சேவை செய்தார். வழிபாட்டுத் தலம் ஒன்றையும் பழைய அதிபர்களில் ஒருவரான புக்வோல்டர் அம்மையாரின் நினைவாக ஒரு கட்டிடமும் அமைத்தார். 1971 - 81 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கல்லூரி பழைய மாணவிகளுள் ஒருவரான திருமதி எஸ். ஜே, சோமசுந்தரம் இப்பதவியில் கடமை ஆற்றினர். விடுதிக் கட்டிடத்தையும் மண்டபம் ஒன்றையும் அமைத்தார்.

1982 இல் கல்லூரி அதிபராகக் கடமை ஏற்றுள்ளார் செல்வி செ. செல்லையா சூசன் ஹெலண்ட் நினைவாக பல வகுப்பறைகளைக் கொண்ட அழகிய கட்டிடம் அமைத்துள்ளார்.

அத்துடன் நவீன விஞ்ஞான ஆய்வு கூடமும் வகுப்பறைகளையும் கொண்ட மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மானிப்பது அவரது தற்போதைய முயற்சி ஆகும்.

இப்படியாக ஆரம்பத்தில் சிறியதாக உருவாக்கப்பட்ட இக்கல்லூரி இன்று பெரும் ஆல விருட்சமாக வளர்ச்சியடைந்ததுடன் ஆரம்பத்தில் சிறிய வகுப்புடன் ஆரம்பமாகி இன்று உயர்கல்விவரை

பரந்துள்ளதுடன் பாரதி கண்ட புதுமைப் பெண்களை உருவாக்கி உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது,

"பட்டங்கள் ஆளவும் சட்
டங்கள் செய்யவும்
பாரினில் பெண்கள் நடாத்த
வந்தோம்"



செல்வி. ஸ்டெலா

என்ற பாரதியின் கூற்றை நிலைநாட்டுவதில் உடுவில் மகளிர் கல்லூரி முனைந்துள்ளது.


உடுவில் மகளிர் கல்லூரியின் ஓர் அங்கமாகத் தொடர் கல்வி நிறுவனம் 1983 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் தொடக்கம் செல்வி R.J.Mann அவர்களை இயக்குநராகக் கொண்டு திறம்பட இயங்கி வருகிறது.



செல்வி. தேவிகா

சென்றாண்டு ஆங்கிலம், பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி, ஆகியவற்றுக்கான தனிக்கட்டடம் அமைக்கப்பட்டது.

இங்கு மனையியற்கல்வி ஆங்கிலம், நடனம், இசை வயலின், ஆங்கிலம், தமிழ், தட்டச்சு, கம்பியூற்றர் போன்ற பல பாட நெறிகள் நடை பெறுகின்றன. சென்ற ஆண்டு தொடக்கம் பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சியும் இங்கு நடைபெறுகின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஷ்ப்ரு நிதி நிறுவனத்துடன் இணைந்து இந்த நிறுவனம் சர்வதேச மொழிதினத்தைச் சிறப்பாகக் கொண்டாடியது. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



செல்வி. சுமனா

-இப்படிக் கல்லூரி வரலாற்றைக் கூறி வியக்கின்றனர் செல்விகள் டி. தேவிகா தெய்வேந்திரம், சுமனா சிவபாலன், ஸ்டெலா டானியல்.

---

**எண்சிலம்பம்**
**போட்டி இலக்கம்: 3**
**விடைகள்:**
**இடமிருந்து வலம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | ... | 2 | 1 | 1 | ... | 2 |
| 9 | 9 | ... | 5 | ... | 4 | 4 |
| | 2 | 8 | ... | 2 | 5 | |
| 5 | ... | 3 | 7 | 5 | | 6 |
| ... | 2 | 0 | | 6 | 3 | ... |
| 1 | 2 | ... | 0 | ... | 0 | 2 |
| 5 | ... | 1 | 0 | 8 | | 2 |

# உங்கள் நோக்கு

''அர்ச்சுனுவின்'' அமைப்பு நன்றாக இருக்கிறது. விடயதானங்களும் சுவைபட மிளிர்கின்றன.

நீண்டகாலமாக ''வெற்றிமணி'' என்ற மாணவர் சஞ்சிகைக்குப் பின்னர், சிறுவருக்கான ஒரு சஞ்சிகை இல்லாத குறையை ''அர்ச்சுனு'' ஈடு செய்துள்ளது கண்டு பெருமை அடைகிறேன்.

எம்போன்ற சிறுவர் இலக்கிய ஆர்வலர்களுக்குப் பெரும் உற்சாகமும், பெருமகிழ்வும் உண்டாகின்றன.

''அர்ச்சுனு'' உலாவந்து தமிழ்ச் சிறுவர் இலக்கியத்தை வளம்படுத்த வேண்டும்.

சங்கராபரணம், சைவப்புலவர் அநு. வை
மயிலிட்டி தெற்கு நாகராஜன்.
தெல்லிப்பழை.

★

அர்ச்சுனு இதழ் என்கையில் வந்ததும் இவ்வுலகையே மறந்து விட்டேன்.

முயற்சி செய்தால் கல்வியில் முன்னேறலாம் என்பதை ''அர்ச்சுனு'' முகப்பு அட்டை மூலம் உணர்கிறேன்.

கதைகளும், பாடல்களும், கட்டுரைகளும் பிரமாதம்.

பாம்குறேவ் வே. வேல்மகிபன்
சுழிபுரம்.

★

அர்ச்சுனுவில் வெளிவரும் அம்சங்கள் அனைத்தும் படித்து பயன் பெறும் வகையில் அறிவுரைகளாக, கட்டுரைகளாக, கணிதப் புதிர்களாக இருக்கின்றன.

குறிப்பாக அறிவுலக அறிமுகம் மிகவும் பயன்தரக் கூடியது, நாட்டுக்குப் பயன்படும் அர்ச்சுனுவின் இப்பணி பல்கிப் பெருகி வளர வாழ்த்துகிறேன்.

''ஜெயகிரி'' அபிமான வாசகி
உடுவில் வடக்கு து. சத்தியதேவி

தம்பி! நீ நல்ல பிள்ளை, குட்டி மாமா தொடர், வானம்பாடியின் புதிய கீதம் போன்றன எம்மைக் கவர்ந்துள்ளன.

கைதடி மேற்கு ஞா. சுதர்சினி.
கைதடி. ஞா. சுகிர்தா
ஞா. நளினி.

★

இலக்கிய ஆர்வம் இருந்தும் இலை மறை காயாக உள்ள சிறுவர்களை இனங் காட்டுவது ''அர்ச்சுனு''வே அத்திப் பூப்போலன்றி தாமரைப் பூப்போல மலரட்டும் அர்ச்சுனு

கொற்றாவத்தை மா. மதியழகன்.

★

அர்ச்சுனு முகப்பு அட்டையில் திறமையான மாணவரின் படங்களைக் காண்கிறோம். கீழ பெயர்களையும் வெளியிட்டு இருக்கலாமே?

எப்பிரச்சினை வந்தாலும் இடைவிடாது அர்ச்சுனுவைத் தொடர்ந்து வெளியிடவும்.

இரத்தினபவளம் ஐ. சுந்தரவதனி
குப்பிழான்
ஏழாலை.

★

துணுக்குக் குவியல், குட்டிமாமா, என்பன என்னைக் கவர்ந்த சிறப்பான அம்சங்கள்.

ஆடியபாதம் வீதி, நா. ஸ்ரீரங்கன்
திருநெல்வேலி வடக்கு.

★

என் உள்ளம் கவர்ந்த அர்ச்சுனு! நீ என்றும் வாழ்க. குட்டிமாமா கதை வெகு ஜோர் துணுக்குக் குவியல் என்னைக் கவர்ந்தது.

காரைநகர் கா. அரிகரன்
ஆயிலி

★

மாணவர் ஆக்கங்களைப் பிரசுரித்து அளிக்கும் அர்ச்சுனுவில் குறைகாண முடியவில்லை. சிறுவர் முதல் முதியோர் வரை விரும்பிப் படிக்கும் இம்மாத இதழ் வார இதழாக வெளிவராதா என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது.

புகையிரத நிலையவீதி தி. சதாநந்தன்.
கோண்டாவில்.

# எனது ஊர்
## திருநெல்வேலி

ஈழமணித் திருநாட்டின் வட பால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்துக்கு வடமேற்கே இருமைல் தொலைவில் எனது ஊராகிய திருநெல்வேலி அமைந்துள்ளது எனது ஊரை ஊடறுத்து யாழ் - பலாலி வீதி செல்கிறது

எனது ஊரின் எல்லைகளாக வடக்கே கோண்டாவிலும், தெற்கே கந்தர்மடமும் மேற்கே கல்வியங்காடும் கிழக்கே கொக்குவிலும் அமைந்துள்ளன.

யாழ் மாவட்டத்திலுள்ள சிறந்த நீருள்ள இடங்களில் எனது ஊரும் ஒன்றாகும். யாழ் மாநகர சபைத் தண்ணீர்த் தாங்கிக்கான நீர் இங்கிருந்தே செல்கிறது.

எனது ஊரவரது பிரதான தொழில் விவசாயமாகும். எனினும், இப்பொழுது பலர் வியாபாரத்திலும், அரசாங்க உத்தியோகங்களிலும் உள்ளனர்.

எனது கிராமத்தின் கிழக்குப புறத்தில் பல தோட்டங்களும் வயல்களும் பச்சைப்பசேலெனக் காட்சி தருகின்றன. இங்குள்ள தோட்டங்களில் பொதுவாகப் புகையிலை செய்கை பண்ணப்படுகிறது.

இலங்கையிலுள்ள ஏழு பல்கலைக்கழகங்களுள் ஒன்றான யாழ் பல்கலைக்கழகம் எனது ஊராகிய திருநெல்வேலியில் அமைந்திருப்பது எமக்குச் தனிச் சிறப்பைக் கொடுக்கின்றது.

திருநெல்வேலியிலுள்ள பாடசாலைகளில் முத்துத்தம்பி வித்தியாலயம் சிறந்ததாகும் இப்பாடசாலை முன்னர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

''அன்னயாவினும் ஆயிரங்கோடி; ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்', என்ற பாரதியார் பாடலுக்கமைய முத்துத்தம்பி வித்தியாலத்தில் ஒரு அநாதைகள் இல்லம் உள்ளது. இங்கிருக்கும் சுமார் நூறு அநாதைச் சிறுவர்க்கு இலவச கல்வி, உணவு, உடை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.


UPLANDS FARM
கோழிக் குஞ்சுகள்

(LOHMANN) பிறவுன் சேவல்
(கெதியில் அதிக வளர்ச்சியடையக் கூடியது)

(LOHMANN) பிறவுண் பேடு
(குறுகிய காலத்தில் அதிக நாட்கள் முட்டையிடும்)

(COBB) புரேயிலர் இறைச்சிக் குஞ்சு

ஒவ்வொரு வாரமும் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

"பிறீமா"
கோழித்தீனிகள் விற்பனைக்கு உண்டு.

AGENT

S. F. PAUL, NO 9. KANDIAH LANE,
CHUNNAKAM EAST CHUNNAKAM


இலங்கையில் நாவலருக்குப் பின் சைவ சமயமும், தமிழும் தழைத்தோங்க வைத்தவரும், இலக்கியக் கலாநிதிப் பட்டம் பெற்றவருமாகிய பண்டிதமணி -சி-கணபதிப்பிள்ளை அவர்கள் திருநெல்வேலியில் நீண்ட காலம் வாழ்ந்தமை எமக்குச் பெருமையளிக்கிறது,

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பசுவதைக்குப் பயந்து இந்தியாவிற்கு ஓடிச் சென்ற சுவாமி ஞானப்பிரகாசர் எனது ஊரிலேயே பிறந்து வளர்ந்தமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

செல்வன் பா. இளமாறன்
(யாழ் இந்துக் கல்லூரி)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## முகவர் நிலையம்

* மத்திய கிழககு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு
* துரிதகதிப் பிரயாணம்
* நம்பிக்கை, நாணயம், நேர்மை, கண்ணியம்

இவற்றுக்கு ஒரு முகவர் நிலையம்.

# கோல்டன் ரவல்ஸ்

கிளை இல 1

மயிலங்காடு
ஏழாலை

புகையிரத நிலைய வீதி
சுன்னுகம்.

---

யாழ்நகரில்
42 வருட அனுபவம் கொண்ட
மிகவும் பிரசித்தி பெற்ற
பல் கட்டுபவரும் கண்பரிசோதித்து
கண்ணுடி கொடுப்பவரும்

மக்கள் நன்மை கருதி
ஒரே இடத்தில் அமைந்துள்ள
தன்னிகரில்லா ஸ்தாபனம்

# வி. ரி. அன் சன்ஸ்

317 மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

முகாமையாளர்:- S. றெஜி (றெஜினேட்)

தங்க நகைகளை
கூடிய விரைவில் விற்க
நீங்கள் நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்

## நியூ ஈழம் ஜுவலரிமாட்

(முற்றிலும் குளிரூட்டப்பட்ட ஒரே நிறுவனம்)

இலக்கம் : (423, 247)

கே. கே. எஸ். வீதி.
சிவன் கோவிலடி
யாழ்ப்பாணம்,
(சண்முகம் தேனீர்சாலைக்கு அருகாமையில்)

அழகிய வர்ண படப்பிடிப்புகளுக்கும்
சிறந்த முறையிலான வீடியோ
படப்பிடிப்பிற்கும்

## பாரத் ஸ்ருடியோ

கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

வீடியோ கசட்டுக்களை வாடகைக்குப் பெறவும்
பாடல்களைப் பதிவு செய்வதற்கும்

## பாரத் வீடியோ சென்றர்

51/1 கன்னாதிட்டி வீதி
யாழ்ப்பாணம்.


இச்சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், 15,2 வது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது



**நம்பிக்கை நாணயத்தின் சின்னம் ஷப்ரு**

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985 [illegible] | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,[illegible] | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 14% |
| 6 மாதங்கள் | — | 16% |
| 12 மாதங்கள் | 16% | 18% |
| 24 மாதங்கள் | 18% | 20% |
| 36 — | 20% | — |

**SHABRA UNICO FINANCE LIMITED**

61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.

**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்**

207, மின்சார நிலைய வீதி தொலை பேசி 22073 - 24805 யாழ்ப்பாணம்